விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
## VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை20 திங்கட்கிழமை (03.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 46

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# தமிழர் தாயகத்தில்
# நாட்டின் 55வது சுதந்திர தினத்தை
# துக்கதினமாக அனுஷ்டிக்க ஏற்பாடு!

## பொது அமைப்புகள் அழைப்பு

(நமது நிருபர்)

**நாடு தழுவிய ரீதியில் நாளை செவ்வாய்க் கிழமை 55வது சுதந்திர தினத்தை வெகு விமரிசையாக கொண்டாடுவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டு வரும் அதேவேளை தமிழர் தாயகப் பிரதேசங்களில் சுதந்திர தினத்தை கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு துக்க தினமாக அனுஷ்டிப்பதற்கு வெகுஜன அமைப்புக்கள் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன:**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஒரு வருடத்தைக் கடந்த நிலையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை,இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு,புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற் கொள்ளப்படாத நிலையில் 55 வது சுதந்திர தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கடந்த 20 வருடகால யுத்த அனர்த்தங்களினால் தமது சொந்த வாழ்விடங்களை இழந்து,ஏதிலிகளாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவல வாழ்க்கை வாழும் நிலையில சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் எப்படிச் சந்தோஷமாகக் கொண்டாட முடியும் என்ற கேள்வியை பல்வேறு பொது அமைப்புக்கள் எழுப்பியுள்ள நிலையில் தமிழ் மக்கள் சுதந் தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்க தயாராகவுள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்து

(10ம் பக்கம் பார்க்க)



55வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கைக் கடற் படையினர் நடத்திய ஒத்திகையைப் படத்தில் காணலாம்.

## வவுனியாவில் இன்று மௌன ஊர்வலம்

(வவுனியா)

தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்டில் சுதந்திரம் இல்லை என்பதை எடுத்துக் காட்டும் முகமாக இன்று வவுனியா நகரில் கறுப்புப் பட்டி அணிந்து மௌன ஊர்வலப் போராட்டம் ஒன்று நடை பெறவுள்ளது.

வவுனியாப் பல்கலைக் கழக மாணவர்களினால் நடத்தப்படவுள்ள இவ் மௌன ஊர்வலம் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு வவுனியா மாவட்டச் செயலகத்தில் முடிவடையவுள்ளது.

இவ் ஊர்வலத்தில் வவுனியாக் கல்வியியற் கல்லூரி மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களும் பங்கு கொள்ளவுள்ளனர்.இவ் ஊர்வலத்தின் முடிவில் பிரதமருக்கான மகஜர் ஒன்றும் வவுனியா அரச அதிபரிடம் கையளிக்கப்படும். (வ)

## முன்னாள் தளபதி நம்பியார் இன்று வடபகுதிக்கு விஜயம்

### அமைச்சர் மிலிந்தவுடனும் சந்திப்பு

(கொழும்பு)

ஒரு வாரகால விஜயம் ஒன்றை மேற் கொண்டு இலங்கை வந்துள்ள முன்னாள் இந்தியஇராணுவத் தளபதி லெபஜெனரல் சதீஸ் நம்பியார் இன்று வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார். வட பகுதியில் சில தினங்கள் தங்கியிருந்து யாழ்.குடாநாட்டிற்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

வடபகுதி அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மீள்குடியேற்றம் தொடர்பாக அறிக்கை ஒன்றை இலங்கை அரசிற்கு சமர்ப்பித்துள்ள நம்பியார் நேற்றுமுன்தினம் இலங்கை வந்தார்.அன்று மாலையே இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் சந்தித்து உரையாடியதாகவும் தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் மிலிந்த மொறகொட,பாதுகாப்பு

(10ம் பக்கம் பார்க்க)

### பேர்ளினில் 5ம் சுற்றுப் பேச்சு

## புலிகளின் பிரதிநிதிகள் இன்று கொழும்பு பயணம்

(நமது நிருபர்)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இன்று காலை கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்குப் பயணமாகவுள்ளனர்.

தாய்லாந்தில் நடந்து முடிந்த 4ம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை அடுத்து ஏற்கனவே தீர்மானித்தபடி பேர்ளினில் இம் மாதம் 7ம்,8ம் திகதிகளில் 5ம் சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் சார்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் இன்று கொழும்பு செல்லவுள்ளனர்.

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலணிச் செயலாளர் புலித்தேவன் மற்றும் அலக்ஸ்,தொல்காப்பியன்,செழியன் ஆகியோர் கிளிநொச்சியில் இருந்தும்,புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட விஷேட தளபதி கேணல்

(10ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான் குடி பொலிஸ் நிலைய காவலரண் முன்பாக நேற்று அதிகாலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 30வயதுடைய அப்துல் மஜீத் என்பவரே உயிரிழந்தவராவர்.இச் சம்பவத்தையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## சிறுவர்கள் பற்றி முறையீடு செய்யலாம்

(கொழும்பு)

சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் நிதிய அலுவலகத்தில் முறைப்பாடுகளைச் செய்யலாம் என்று ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் நிதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல்பெலாமி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

(10ம் பக்கம் பார்க்க)

## பெர.ஐ.முன்னணியுடன் கூட்டுச்சேர 35 ஆசனங்களை கேட்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

முப்பத்தைந்து நாடாளுமன்ற ஆசனங்களை தமக்கு ஒதுக்கித் தந்தால் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கத் தயாரென ஜே.வி.பி அறிவித்துள்ளது.

தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பதவியிலிருந்து அகற்றும் நோக்கில்,பொது ஜன ஐக்கிய முன்னணியும்,ஜே.வி.பியும் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றன.

தற்போது 16 நாடாளுமன்ற ஆசனங்களை மாத்திரம் ஜே.வி.பியினர் கொண்டுள்ளனர்.பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பியினருக்கமிடையில் பல சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்துள்ள போதும், முக்கிய விடயங்களில் இன்னும் தீர்வு காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் 35 ஆசனங்களை தமக்கு ஒதுக்கித் தரவேண்டும் என

(10ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டாம்

### கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவு


(கொழும்பு)

மாகாண சபை முதலமைச்சர்களின் கோரிக்கைக்கு அமைய தொண்டர் ஆசிரியர்களுக்கு எத்தகைய நியமனமும்,வழங்க வேண்டாம் என தன்னைப் பணித்துள்ளதாக கல்வி அமைச்சர் கருணா சேனாகொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கு

(10ம் பக்கம் பார்க்க)





# உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

# CRICKET WORLD CUP 2003

## உலகக் கிண்ணத்தை இம்முறையும் சுவீகரித்துக் கொள்ளுமா அவுஸ்திரேலியா!

இங்கிலாந்தில் 1999ம் ஆண்டு உலக கிண்ணத்தை கைப்பற்றிய அவுஸ்திரேலியா, இம்முறையும் கோப்பையை வென்று வரலாறு படைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை மேற்கிந்தியத் தீவுகளும், அவுஸ்திரேலியாவும் மட்டுமே 2முறை உலகக் கிண்ணத்தை வென்றுள்ளன.

உலக டெஸ்ட் தரவரிசையிலும், ஒரு நாள் போட்டியின் தரவரிசையிலும் முதலிடத்திலுள்ள அவுஸ்திரேலியாவே கிண்ணத்தை வெல்வதற்கு அதிக வாய்ப்புள்ள அணி என கிறீக்கெற் வல்லுநர்களால் கணிக்கப்பட்டுள்ளது.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்து அம்சங்களிலும் சிறந்ததாக அவுஸ்திரேலியா உள்ளது.

தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கும் மேத்யூ ஹேடன், அடம் கில்கிறிஸ்ட் ஆகியோர் யாருடைய பந்துவீச்சையும் சிதறடிப்பதில் வல்லவர்களாக உள்ளனர்.

சிட்னியில் 2003 ஜனவரி 23ல் இருவரும் இணைந்து வெறும் 12.2 ஓவர்களில் 118 ஓட்டங்களை விளாசியது சமீபத்திய சிறப்புக்களுக்கு உதாரணமாகவுள்ளது.

டெஸ்ட் ஆட்டங்களில் உலகிலேயே அதி வேகமாக இரட்டைச் சதங்கள் பெற்றவர் என்பது கில்கிறிஸ்டிடம் உள்ள சிறப்பு.

இவர்களைத் தொடர்ந்து களம் இறங்கும் கப்டன் ரிக்கி பொண்டிங், டேமியன் மார்ட்டின், மைக்கல் பெவன் போன்றவர்கள் அணியின் துடுப்பாட்டத்திற்கு கூடிய வலு சேர்க்கின்றனர்.

குறைந்தபட்சம் 20 ஒருநாள் போட்டிகளில் விளையாடியவர்களில் உலகிலேயே அதிக சராசரியை (ஓர் இனிங்ஸுக்கு 54.80 ஓட்டங்கள்) பெற்றுக் கொண்டவர் என்ற பெருமை பெவனுக்கு உணடு.

சமீபத்தில் பல ஆட்டங்களில் இந்த




1999ம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற குதுகலத்தில்

"மூவர்" கூட்டணி அவுஸ்திரேலியாவுக்கு அற்புதமான வெற்றிகளை பெற்றுத் தந்திருக்கின்றது.

இவற்றிற்கு மேலாக சகலதுறை ஆட்டக்காரரான டேரன் லீமன், பந்துவீச்சாளர்களான ஷேன்வோன், பிரெட் லீ போன்றவர்களும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கக் கூடியவர்களே. அண்மையில் இங்கிலாந்திற்கு எதிரான தொடரில் இவர்கள் வெளிப்படுத்திய திறமை அதற்குச் சான்றாக உள்ளது.

பலம் மிக்க வீச்சு "மெஷின்" போல எப்போதும் துல்லியமாக ஆ∴ப் ஸ்டம்புக்கு வெளியே பந்துவீசி துடுப்பாட்ட வீரர்களை திணறடிக்கும் கிளென் மெக்ராத், புயல் போல பந்துவீசி எதிராளிகளை திக்குமுக்காடச் செய்யும் 'எக்ஸ்பிரஸ் வீச்சாளர் பிரெட் லீ, மிகக் குறைந்த தூரமே ஓடி வந்தாலும் அற்புதமான வேகத்துடனும், நேர்த்தியுடனும் பந்துவீசும் கில்லெஸ்பி, சுழல் பந்து வீச்சால் துடுப்பாட்டககாரர்களை கிறுகிறுக்க வைக்கும் ஷேன் வோன் ஆகியோர் அணிக்கு பலம் என்பதில் சந்தேகம் இல்லை.

தென்ஆபிரிக்க மைதானங்கள வேகப் பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் எதிரணிக்கு இந்த வீச்சாளர்கள் சிம்ம சொப்பனமாக திகழப் போவது உறுதி.

மெக்ராத், கில்லெஸ்பி, வோன், மைக்கல் பெவன் போன்றவர்கள் அண்மையில் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது அவுஸ்திரேலிய அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தக் கூடும்.

எது எப்படி இருப்பினும் அவுஸ்திரேலியாதான் கிண்ணத்தை வெல்லும் • என கிறிக்கெற் வல்லுநர்கள் கணித்துள்ளனர். இதுவே அணியின் வலிமைக்கு சிறந்த சான்று.

## உலகக் கிண்ணக் கனவில் தென் ஆபிரிக்கா

அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த படியாக தென் ஆபிரிக்காவுக்குத்தான் உலகக் கிண்ணத்தை வெல்லக்கூடிய வாய்ப்பு உள்ளது என கிறிக்கெற் வல்லுநர்கள் பெரும்பாலானோர் கணித்துள்ளனர்.

தாய் நாட்டில் போட்டி நடைபெறுகிறது என்ற சாதகமான அம்சத்துடன் வெற்றிக்கு பிரகாசமான வாய்ப்புள்ள இடங்களையும் அணி நிர்வாகம் தேர்வு செய்துள்ளதால் சூப்பர் சிக்ஸுக்கு சுலபமாக தகுதி பெறும் வாய்ப்பு தென் ஆபிரிக்காவுக்கு அதிகமாகவே உள்ளது.

பி பிரிவில் இந்த அணிக்கு மேறகு இந்தியத் தீவுகள் அணி மட்டுமே சிறிது சவாலாக விளங்கும் காரணம் கடந்த ஆண்டுக் கடைசியில் இந்தியாவில் நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரில் இந்தியாவை 4-3 என மேற்கிந்தியத் தீவுகள் வென்றது கிறிக்கெற் வட்டாரத்தில் பரவலான பேச்சு.

சிறந்த துடுப்பாட்ட வீரரும், தொடக்க ஆட்டக்காரருமான ஹொஷல் கிப்ஸ் அண்மைக் காலங்களில் அபாரமாக ஆடி வருவது துடுப்பாட்டத்திற்கு சிறப்பான அம்சம்.

2002ல் 37 ஆட்டங்களில் 5 சதங்களுடன் 1,310 ஓட்டங்கள் (சராசரியாக 100 பந்துகளில் 88.81 ஓட்டங்கள) பெற்றுள்ளார். கடந்த ஆண்டு அதிக ஓட்டங்களை குவித்தவர்களில் 2ம் இடத்தை பிடித்துள்ளார் கிப்ஸ்.

உலகக் கிண்ணப் போட்டியில் தனிப்பட்ட ஒரு வீரரின் அதிகபட்ச ஓட்டங்களுக்கு (118 ஆட்டமிழக்காமல்) சொந்தக்காரரான கேரி கேர்ஸ்டனின் அனுபவம் அணிக்கு வலிமை சேர்க்கும்.

## கென்யாவில் விளையாட இலங்கைக்கு ஆட்சேபமில்லை

### அணித் தலைவர் ஜெயசூரியா பேட்டி



எங்களுக்கு கென்யாவில் எந்த விதபிரச்சினையும் இல்லை. நாங்கள் அங்கு விளையாடப் போகிறோம்.

இவ்வாறு தென்னாபிரிக்காவை சென்றடைந்துள்ள இலங்கை கிறிக்கெற் அணித் தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது, கென்யாவில் நடைபெறும் ஆட்டங்களால் சிறிலங்காவுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏனைய நாடுகள் பகிஷ்கரிப்பதைப் போல நாங்கள் பகிஷ்கரிக்கமாட்டோம். பாதுகாப்புக் காரணங்களுக்காக நைரோபியில் விளையாடுவதற்கு நியூசிலாந்து மறுத்து வருகிறது.

இலங்கை அணி கென்யாவுக்கு பெப்ரவரி 24ல் சென்றடையும் ஆனால் நியூசிலாந்து அதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் அங்கு செல்ல வேண்டும். கென்யாவில் கடந்த நவம்பர் மாதம் நடந்த தற்கொலைத் தாக்குதலில் 16 பேர் கொல்லப் பட்டனர். இதனால் அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இத் தாக்குதலுக்கு அல்கெய்டா அமைப்பு உரிமை கோரியிருந்தது.

இலங்கை அணி மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் ஏற்கனவே பல தடவை ஆடியுள்ளது. தென் ஆபிரிக்காவிடம் 4-1 என்ற முறையில் தோல்வி அடைந்தது. அவுஸ்ரேலியாவில் கடந்த வி.பி கிண்ணத் தொடரில் 8ஆட்டங்களில் 2ல் மட்டுமே வெற்றி அடைந்தது. அவர் மேலும் தெரிவிக்கையில்:-

"நாம் தற்போது ஒரு பலமான பக்கத்தில் இருக்கிறோம்" நாம் முதல் சுற்றில் நன்றாக விளையாடினால் தான் மற்றைய சுற்றுக்களிலும் முன்னேறலாம் என நினைக்கிறேன். தென் ஆபிரிக்காவில் நாம் நன்றாக ஆடவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அவுஸ்திரேலியாவில் எமது பழைய ஆட்டத்தை ஆட ஆரம்பித்து விட்டோம். அதனை கென்யாவிலும் தொடரவே நாம் விரும்புகிறோம்.

அவுஸ்திரேலியாவின் சூழ்நிலை வேறு. தற்போதைய சூழ்நிலை வேறு. எனவே எமது ஆட்டத்தை தொடர்ந்து திறமையாக முன்னெடுப்போம்.

இலங்கை அணி 1996ல் உலகக் கிண்ணத்தை வென்று சம்பியனாகியது தெரிந்ததே. நாங்கள் தற்போது 'பி' பிரிவில் தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து, மேற்கு இந்திய தீவுகள், கென்யா, கனடா, பங்களாதேஷ் அடங்கிய பிரிவில் இடம் பெற்றுள்ளோம். எனினும், எமது திறமையான விளையாட்டின் மூலம் உலகக் கிண்ணத்தை கைப்பற்ற முயற்சி செய்வோம் என்றார் ஜெயசூரியா. (த-55)

## உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகள் நடைபெறவுள்ள விளையாட்டரங்குகள் சில



கிங்ஸ்மீட், டர்பன்



தி வாண்டரர்ஸ், ஜோஹனஸ்பர்க்



நியூலேண்ட்ஸ், கேப்டவுன்

## சிறு விளம்பரம்

### விற்பனையாகிறது

2003/2004 இராசி பலாபலன்கள் சகல போட்டிப்பரீட்சைகளுக்கும் ''தகவல் தடாகம்'' (பொதுஅறிவு, உளச்சார்பு, மொழித்திறன்) பொது அறிவு, அழகியல் (தரம் 1-5) ''புலமைப்பரிசில் துரித மீட்டற்பயிற்சி'' -'ஆனந்தி'- வெளியீடுகள் V.A.சிவராசா வெளியிட்டது என்று கேளுங்கள். ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள். 152B, அரசடி றோட்,கந்தர்மடம். (6515)


# சாவ. நீதிமன்றம் இன்று முதல் சொந்த இடத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்றம் இன்று முதல் சாவகச்சேரி நகரின் கச்சாய் வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கவுள்ளது.

மேற்படி நீதிமன்றமானது கடந்த 2000 ஆம் ஆண்டு மே மாத இடப் பெயர்வின் பின்னர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தற்காலிகமாக இயங்கி வந்ததும், நீதிமன்றக் கட்டடம் சேதமுற்றதும் தெரிந்ததே.

சாவகச்சேரியில் இன்றுமுதல் இயங்கவுள்ள நீதிமன்றத்துக்கு மாவட்ட நீதிபதியாகவும், நீதிவானாகவும் க.அரியநாயகம் நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதிபதி இன்றைய தினமே தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இவரை யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதியாகவும், மேலதிக நீதிவானாகவும் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## யுனிசெவ் திட்டப் பணிப்பாளர்

# தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கம்

(கொழும்பு)



யுனிசெவ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹரோல்ட் பெலாமி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் ஹரோல்ட் பெலாமிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களைத் தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்வது இல்லை என உறுதியளித்துள்ளனர் என்று தெரிவித்த பெலாமி,

சமாதான முயற்சிகளின் போது சிறுவர்களின் நலன்கள் குறித்து அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

சிறுவர்களின் உரிமைகளைப் பேணல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.


கடந்த 20 வருடங்களாக இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக சிறுவர்கள் பல்வேறு பாதிப்புக்களுக்கு



உள்ளாகியுள்ளனர் என்பதனை அறிய முடிந்தது.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் பெலாமி கேட்டுக் கொண்டார்.

இப்பேச்சுவார்த்தைகளின் பின்னர ஜனாதிபதி அளித்த விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டார். (உ-8)




யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் நாடி ஏழாவது நூல் வெளியீட்டு விழாவில் மருத்துவ பீட பீடாதிபதி வசந்தி அரசரட்ணம் மங்கள விளக்கு ஏற்றுவதையும், டாக்டர் இ.சிவசங்கர் மருத்துவபீட மாணவர் ஒன்றிய தலைவர் ஸ்ரீ.கோபிசங்கர் கணனித்துறை விரிவுரையாளர் ராஜசிவசக்தி மகேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். படங்கள் :க. பவன்

## மூளை வளர்ச்சி குன்றிய

# சிறுவர்கள் தொடர்பாக இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் தொடர்பான விசேட கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மூளை வளர்ச்சி குன்றிய சிறுவர்களைப் பயிற்றுவிப்பதில் துறைபோன வெளிநாட்டவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

மூளை வளர்ச்சி குன்றிய சிறுவர்களின் பெற்றோர், பாதுகாவலர் இதில் கலந்து கொண்டு தமது பிள்ளைகள் தொடர்பில் விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை, மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பாடசாலை ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நிறுவுவது தொடர்பான முடிவும் இன்றைய தினம் நிறைவேற்றப்படவுள்ளது. (உ-4)

# கிளி.இல் காணாமல் போனோர் குறித்து எவரும் அக்கறை காட்டுவதில்லை

## உறவினர்கள் மனக்குமுறல்

(கிளிநொச்சி)

இராணுவ ஆக்கிரமிப்பின் போது கிளிநொச்சிப் பகுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பாக எவரும் எவ்வித அக்கறையும் காட்டாமை குறித்து காணாமல் போனோரின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சிப் பிரதேசம் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, பாதுகாப்பிற்காக இடம்பெயர்ந்த மக்கள், மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களை பார்வையிடச் சென்றபோது இவ்வாறு காணாமல் போயிருந்தனர்.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சிப் பிரதேசம் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டபோது, 8 சடலங்கள் உட்பட 69 மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இவற்றில் 19 எலும்புக் கூடுகளை காணாமல் போனோரின் உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

அடையாளம் காணப்படாத ஏனைய 50 பேரின் எலும்புக் கூடுகளும் கிளிநொச்சியில் உள்ள தமிழீழ காவல் துறையினரின் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு காணாமல் போயுள்ள 196 அப்பாவிப் பொதுமக்களில் ஏனைய 177 பேரின் நிலை என்ன என்பது பற்றி அறிய முடியாதுள்ளது. (உ-10)

# ஏ'9 வீதியில் உள்ள கண்ணி வெடிகளை 10 தினங்களில் அகற்ற இணக்கம்

(கொழும்பு)

ஏ-9 வீதியில் 17இடங்களில் கண்ணி வெடிகள் உள்ளதாக இனங்காணப்பட்டதற்கிணங்க அவ்விடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதனால் 10 தினங்களில் இக் கண்ணி வெடிகளை அகற்ற மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 65கோடி ரூபா நிதியுதவியுடன் ஏ-9வீதிப் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை, மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் 100தொண்டர் களுக்கு கண்ணி வெடி அகற்றுவது தொடர்பாகப் பயிற்சி அளித்து வரு கின்றனர். (உ-3)

# சிங்களக் கிராமங்களுக்கு பிரதமர் ரணில் விஜயம்

(அனுராதபுரம்)

கடந்த இரண்டு தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற இன யுத்தத்தினால் பாதிப்புற்ற சிங்களக் கிராமங்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றார்.

இத்திட்டத்தின் கீழ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அனுராதபுரம் சென்று யுத்தத்தினால் பாதிப்புற்ற சிங்களக் கிராமங்களைப் பார்வையிட்டதுடன், அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

அனுராதபுரத்தில் கெப்பிட்டிவெவவில் உள்ள மகலிக்கவெவ, யப்பாவெவ, கனுகங்கவெவ, பிங்கிரிவெவ ஆகிய கிராமங்களுக்குச் சென்று மக்களின் குறைகளையும், தேவைகளையும் கேட்டறிந்தார்.

அரசு தற்போது முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளுக்கு இக்கிராம மக்கள் தமது பூரண ஆதரவினை பிரதமரிடம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன், இக்கிராமங்களின் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் புதிய திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளதாகவும் அங்குள்ள மக்களிடம் பிரதமர் ரணில் உறுதியளித்தார். (மீ)

# சிரான் உபகுழு அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிரான் அமைப்பு உபகுழுவின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் யாழ். அரச செயலகத்தில் இடம்பெற்றது.

சிரான் அமைப்பின் பணிப்பாளர் செல்வின் இரனியேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் யோ.கயல்விழி, தமிழீழ நிர்வாக சேவைத்துறைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், திட்டப்பணிப்பாளர் எஸ்.சிவபாத சுந்தரம் மற்றும் யாழ். மாவட்ட சிரான் திட்ட இணைப்பாளர் எஸ்.இரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)


## அரசாங்க அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

**2003 ஆம் ஆண்டுக்குரிய அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள், வாகனங்கள் என்பவற்றை சேவிஸ் செய்வதற்கான.**

# கேள்வி கோரல்

யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவற்றை சேவிஸ் செய்வதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

சேவிஸ் செய்தல் தொடர்பான நிபந்தனைகளையும், விண்ணப்பப் படிவத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில், அலுவலக நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். என விலாசமிட்டு மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகக் கேள்விப் பெட்டியிலோ 2003.02.18 ஆம்திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமூகமளிக்கலாம்.

சேவிஸ் விபரம்

1.கணனி-**Computer**
2.புகைப்படப்பிரதி இயந்திரம்-**Photo copier**
3.றோணியோ இயந்திரம்
4.தட்டச்சு இயந்திரம்
5.பக்ஸ் இயந்திரம்
6.மின் பிறப்பாக்கி-**Generator**
7.வாகனங்கள்
அ.பிக்கப்
ஆ.வான்
இ.கார்
ஈ.மோட்டார் சைக்கிள்
உ.லொறி

**செ.பத்மநாதன்**
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/5724)

## இன்று ஒரு தகவல்

### முயற்சி தான் முக்கியம்!

ஊருக்கு வெளியில் அமைதியான ஒரு இடம் அங்கே ஒரு ஆச்சிரமம். அதில் ஒரு சாமியார். அவர் தினமும் நல்ல போதனைகள் செய்வார். பலர் போய் அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்து, அவர் சொல்கிற அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டுவருவது வழக்கம். ஒரு தடவை அவரைப் பார்த்துவிட்டுப போவதற்காக மூன்று வெளியூர் தம்பதிகள் வந்தார்களாம். அந்த மடத்திலேயே சர்ப்பிட்டுக் கொண்டு தங்கியிருந்து அவருடைய போதனைகளைக் கேட்டுக் கொண்டு போக வேண்டும் என்பது அவர்கள் நோக்கம்.

காலையில் குளித்துவிட்டுப் பூஜையில் உட்கார்ந்தார் அந்த சுவாமி. இவர்களும் குளித்துவிட்டு அந்தப் பூஜையைப் பார்ப்பதற்காக அவர் முன் வந்து உட்கார்ந்தார்கள் பூஜை ஆரம்பமாகி சம்பிரதாயப்படி அது வெகு நேரம் நடந்து கொண்டே இருக்கிறது. இவர்களுக்கு நல்ல பசி... இருந்தாலும் இந்த நேரத்தில் அதை எப்படி வெளியே காட்டிக்கொள்வது, பேசாமல் இருந்தார்கள். அந்த சுவாமி பூஜையை முடித்தார். அதன் பின் பேச ஆரம்பித்தார். பேச்சு அருமையாகத்தான் இருந்தது. அமிர்தமாகத்தான் இருந்தது! இருந்தாலும் இவர்களுக்கிருக்கிற வயிற்றுப் பசி அதைச் சரியாகக் கவனிக்க விடவில்லை. அந்தச் சுவாமியோ இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை!.

இவர்களுக்கு மனதிற்குள் ஓர் எண்ணம். "உள்ளே சாப்பாடு தயாராகிக் கொண்டு இருக்கும் போலிருக்கிறது... இந்தப் பேச்சு முடிந்ததும் நம்மை உள்ளே அழைத்துக் கொண்டு போவர்" என்று ஒரு நினைப்பு! ஆனால் சுவாமி இதைப்பற்றி எதுவுமே பேசவில்லை. கண்டுகொள்ளவுமில்லை. ஒரு அம்மாவால் அதற்குமேல் சும்மா இருக்க முடியவில்லை. "சாப்பாடைக் கவனிக்கலாமா?" என்று மெதுவாக ஆரம்பித்தார். "ஓ... கவனிக்லாமே!" என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனார் சுவாமி! இவர்கள் மிகவும் அவசரமாக எழுந்து உள்ளே ஓடினார்கள். அங்கே ஒரு மேஜைமேலே ஒரு கிண்ணம் மூடி இருந்தது! "ஓ.... இது தான் சாப்பாட்டு மேஜைபோல இருக்கிறது... இங்கே சாப்பாடு வந்துவிடும்" என்று நினைத்தார்கள். உடனே போய் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள்.

சுவாமி அந்த கிண்ணத்தை எடுத்து அந்த அம்மாவிடம் கொடுத்தார். அவர் உடனே அதை வாங்கி மூடியைத் திறந்து பார்த்தார். உள்ளே ஒரு சாவி இருந்தது. "ஓ... சரி தான் இது சமையலறைச் சாவிபோல இருக்கிறது. அங்கே போய் அதைத் திறந்து... சாப்பாட்டை நாமே எடுத்துக் கொண்டு வந்து இங்கே வைத்துச் சாப்பிடவேண்டும் போல இருக்கிறது." என்று நினைத்தார். "சாவி இருக்கிறது அல்லவா? வாருங்கள் பூட்டிய அறையைக் காட்டுகிறேன்" என்று சுவாமி அழைத்துக் கொண்டு போய்க் காட்டினார்.

இவர் அந்த அறையை வெகு ஆவலோடு திறந்து உள்ளே பார்த்தால்... அங்கே அரிசி, பருப்பு விதவிதமான காய்கறிகள் எல்லாம் இருக்கின்றன. சமையலுக்கு வேண்டிய மிளகாய் எண்ணெய், பால்,தயா, நெய் இப்படி எல்லாமே இருக்கின்றன. அடுப்பு, விறகு, நெருப்புப் பெட்டிகூட அங்கே இருக்கின்றன. சாப்பாடு தயாராக இருக்குமென்று நினைத்துக் கொண்டு போன இவர்கள், இவற்றைப்பார்த்ததும் சோர்ந்து போய்விட்டார்கள். "சுவாமி! என்ன இது? சாப்பாடு இல்லாயா? என்றார்கள். "அதுதான் சாப்பாட்டுக்குரிய எல்லாம் இங்கே ருக்கின்றனவே! அடுப்பு மூட்டி... நீங்கள் தான் அவரவர் ருசிக்குத் தகுந்த மாதிரிச் சமைத்துக் கொள்ள வேண்டும்! இந்தச் சந்தியாசிக்கு எப்படிச் சமைக்கத்தெரியும் என்று கேட்டார் சுவாமி!

"சாப்பாடு தயாராக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்" என்றார்கள் இவர்கள். "நீங்கள் இப்படிச் சொல்லுவீர்கள் என்று நானும் எதிர்பார்த்தேன். இது வரையும் நான் எவ்வளவோ தத்துவங்களை எடுத்துச் சொன்னேன். எல்லாவற்றையும் விட இது தான் அனுபவ பூர்வமான தத்துவம். ஆண்டவன் நமக்கு நல்ல மனதைக் கொடுத்திருக்கிறான். நல்ல வாய்ப்புக்களையும் தந்திருக்கிறான். அவற்றைப் பயன்படுத்தக் கூடிய மூளையையும், சிந்தனையையும் கொடுத்திருக்கிறான். ஆனாலும் அடுப்பை நீங்கள் தான் மூட்ட வேண்டும். உங்களுக்கு உகந்ததை நீங்கள் தான் சமைத்து ருசித்து அனுபவிக்க வேண்டும். ஆண்டவன் அதைச் செய்ய மாட்டான்" என்றாராம் அந்தச் சுவாமி.

நம்முடைய வாழ்க்கையிலே நல்ல பலன்களைப் பெற நாம் தான் முயற்சி செய்ய வேண்டும். அதற்குரிய சூழ்நிலையைத் தான் ஆண்டவன் கொடுப்பான். அதை விளக்குவதற்காகத் தான் அந்த சுவாமி அப்படிச் செய்து காட்டினார். என்று விளக்கம் கொடுத்தார் ஒரு பெரியவர். (சுவாமி சின்மயானந்தர்) அதன் பின்னர் அந்த மூன்று தம்பதிகளும் தெளிவடைந்து விட்டார்களாம். நாம் தெளிவடைவது எப்போது? இந்தக் கதையை என்னுடைய நண்பன் ஒருவனிடம் சொன்னேன். அவன் மிகவும் சந்தோஷப் பட்டான்.

"நீங்கள் சொல்வது சரி சார்! ஆனாலும் நான் அதைவிட ஒரு படி மேலே சார்... எனக்கு அரிசி, பருப்பு இருக்கிற அறை எது என்று கையைக்காட்டி விட்டால் போதும் சார்! கிண்ணத்திலிருந்து சாவியை எடுத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் கூட இல்லைசார்?" என்றான். "அப்படியானால் எப்படியடா அறையைத் திறப்பாய்?" என்று கேட்டேன்.

"பூட்டை உடைத்துத் திறந்துவிடுவேன் சார்... அதுதான் எனக்குப் பழக்கம்" என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

**நிலக்கண்ணிகளை அகற்றும் உடன்படிக்கையில்**

# அனைத்து நாடுகளையும் இணையும்படி அழைப்பு

(கொழும்பு)

1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நிலக் கண்ணிகளை தடைசெய்யும் உடன்படிக்கையில் இதுவரை சேர்ந்து கொள்ளாத அனைத்து ஆஸிய - பசுபிக் நாடுகளையும் இனிமேலும் தாமதிக்காமல் அதில் இணைந்து கொள்ளுமபடி அழைக்கின்றோம்"

நிலக்கண்ணிகளைத் தடைசெய்வதற்கான சர்வதேச இயக்கத்தின் இணைப்பாளர் லிஸ்பேர்ன்ஸ்ரீன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

எந்த ஒருவரையும் பாகுபடுத்தாமல் கண்மூடித்தனமாக தாக்கக் கூடிய இந்த வெடிகளைத் தயாரிப்பவர்களும், உபயோகிப்பவர்களாவது நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கைகளை உடனடியாகவே கைவிட்டுவிட வேண்டும் என்று அவர் அந்த அறிச்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி அமைப்பைச்சேர்ந்த 21உறுப்பினர்கள் கடந்த 30ஆம் திகதி வவுனியா, கிளிநொச்சி போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தார்கள். இலங்கை உட்பட 15நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் இருந்தார்கள்

வவுனியாவில் இக குழுவின் யு.என்.டி.பி மாவட்ட கண்ணிகள் அகற்றும் செயல் தொழில்நுட்ப வியலாளர் திருமதி லியோனி பார்னஸிடன் ஆலோசனைகள் நடத்தினார்கள். கிளிநொச்சியில், மனிதனேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு, நோர்வே மக்கள் உதவி அமைப்பு, கண்ணிவெடி குழு ஆலோசகர், தமிழர் புனர்வாழ்வு நிறுவனம், யு.என்.டி.பி. யாழ். கண்ணிகள் அகற்றும் செயல் தொழில்நுட்பவியலாளர் திரு.ரிம் வோணர் முதலியவர்களுடன் கலந்துரையாடியது.

இக்குழு ஏ-9 பாதையின் நிலக் கண்ணிகளுள்ள பகுதிகளுக்கும். கிளிநொச்சி மத்தியிலுள்ள வெண்புறா நிலையத்துக்கும் விஜயம் செய்தது.

இலங்கையில் அரசாங்கமும். தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கமும கடந்த காலங்களில் நிலக்கண்ணிகளை விஸ்தாரமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்த இருபிரிவினரும் நிலக்கண்ணிகளைத் தடைசெய்யும் ஒப்பந்தம் பற்றி எதிர் காலத்தில் ஆலோசிப்பதாகப் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றனர். இந்தக் கருத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு மேற்படிக் குழுவின் விஜயம் உதவியாய் இருந்தது.

இவ்வாறு லிஸ்பேர்ன்ஸ்ரீன் விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது (பி)

**மாவட்டம் தோறும் சென்று**

# நாட்டு நிலை குறித்து பிரதமர் மக்களுக்கு விளக்கத் திட்டம்

(கொழும்பு)

"மக்களுடன் சந்திப்பு" என்னும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாவட்டம் தோறும்சுற்றுலாச் சென்று பொதுக் கூட்டங்களில் உரையாற்றவுள்ளதாக மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தலைமை தாங்கும் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இந் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கூட்டம் மாத்தறை மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது.

வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தும அரசாங்கத்தின் நடவடிக்கைகள், பொருளாதார நிலவரங்கள், சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்றம் ஆகியன பற்றி பிரதமர் இக் கூட்டங்களில் விளக்கவுள்ளார்.

அரசாங்கம் வாழ்கைச் செலவைக் கட்டுப்படுத்தும் விதத்தில் பல நடவடிக்கைகளை எடுக்கவிருக்கிறது.

சம்பள அதிகரிப்பை வழங்குதல், ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குதல். இளைஞர் படையணியில் 40அயிரம் பேரை இணைத்தல், அரசவங்கிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 20ஆயிரம் பேரை நியமித்தல், போன்ற நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்கவுள்ளது.

அத்துடன் அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்படவிருக்கின்றன.

மேற்படி திட்டங்களை மாவட்ட அமைப்பாளர்களுக்கு விளக்கும் கூட்டம் இம்மாதம் 16,17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக, இது குறித்து விளக்கமளித்த காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (உ)

## இராசி பலன்

**03. 02. 2003**

**(தை 20, திங்கள்)**

| | |
|---|---|
| துதியை | மாலை 5.45வரை |
| சதயம் | பி.இ 4.36வரை |
| இராகுகாலம் | 8.05 - 9.35 |
| சுபநேரம் | 12.35 - 2.05 |

**மேடம்**
எதிர்பாராத நன்மை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி.

**இடபம்**
நல்லசேதி, செய்தொழில் முன்னேற்றம், பெரியோர் மதிப்பு, முயற்சி பலிதம்.

**மிதுனம்**
பிரயாணம், மனச்சஞ்சலம், வாக்கு மேன்மை, காரியதாமதம்.

**கடகம்**
திருடர் பயம், உடல்வியாதி, போசனசுகம், நண்பர்கள் மனஸ்தாபம்.

**சிங்கம்**
எடுத்தகாரியம் கைகூடும், செய்தொழில முன்னேற்றம், களஸ்திர நன்மை, உடல்நலம்.

**கன்னி**
சந்தோஷமான சம்பவம், நல்ல முயற்சி, காரிய அனுகூலம், தனலாபம்.

**துலாம்**
சொத்துக்களால் மனஸ்தாபம், முயற்சி தாமதம், இடமாற்றம், வேலை அனுபவம்.

**விருச்சிகம்**
கல்வியில்ஆர்வம், வாகனசுகம், சகோதரர் உதவி, மாதாசுகம்.

**தனுசு**
கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, உறவினர் கலந்துரையாடல், நல்லசம்பவம்.

**மகரம்**
தனவிரையம், எதிர்பாராத நன்மை, புதிய சொத்து சேரல், முயற்சி தாமதம்.

**கும்பம்**
பெரியோர் மதிப்பு, நல்லமுயற்சி, முயற்சி கைகூடும், போசன சுகம்.

**மீனம்**
உத்தியோகத்தர் உதவி, முயற்சி தாமதம், சுபகாரியச்செலவு, பிரயாணம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# ஸ்ரீ.சு.க. குறித்த கருத்தை ஹரிம் பீரிஸ் வாபஸ்

(கொழும்பு)

லங்கா சமசமாஜக் கட்சி சம்பந்தமாக அண்மையில் தெரிவித்திருந்த கருத்துக்களை ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் வாபஸ் பெற்றுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் வாக்குப் பலம் நாட்டிலுள்ள ஏனைய இடதுசாரிக்கட்சிகளின் வாக்குப் பலத்திலும் பார்க்க அதிகமானது என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் அண்மையில் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக லங்கா சமசமாஜக் கட்சி ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்திருந்தது.

இது குறித்து ஜனாதிபதி கருத்து வெளியிடுகையில். இவ்விடயம் தொடர் பான எமது கருத்தை ஹரிம பீரிஸின் கூற்று பிரதிபலிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சியின் உபதலைவர் பேராசிரியர் திஸ்ஸ விசாரணைக்கு ஊடகப் பேச்சாளர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் லங்கா சமசமாஜக்கட்சியிடம் மன்னிப்புக் கோருமாறு ஜனாதிபதி தன்னை பணித்திருக்கிறார். என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (உ-8)

# இலங்கையில் சுபீட்சம் நிலவ சூடான் சபாநாயகர் பிரார்த்தனை

(கொழும்பு)

"இலங்கையில் தற்போது உருவாகியுள்ள சமாதானம் நிலை பெற்று அனைத்த மக்களும் சுபீட்ச வாழ்வு வாழ எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்தனை செய்கிறேன்"

இவ்வாறு தெரிவித்துள்ளார் சூடான் சபாநாயகர் அஹமட் இப்றாஹிம் அல்தஹிர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைப் பாராளுமன்ற அலுவலகத்தில் சபாநாயகர் ஜோசப்மைக்கல் பெரேராவைச் சந்தித்து பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கைக்கும் சூடானிற்கும் இடையிலான உறவுகள் தொடர்ந் தும் வளரவேண்டும்.

இதனால் இருநாடுகளும் பல நன்மைகளை அடையும் என்றார்.

இதேவேளை, நான்கு நாள் விஜயம் மேற்கொண்ட சூடான் பாராளுமன்ற சபாநாயகர் உள்ளிட்ட தூதுக்குழுவினரைக் கடந்த வியாழக்கிழமை இலங்கைப் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தலைவர் அஸ்வர் வழியனுப்பி வைத்தார். (உ-10)

# இனங்களை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டியே இலங்கைக்குப் பொருத்தமானது

## சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எஸ். அனிஸ்

(கொழும்பு)

இனங்களை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி முறையே இலங்கையில் அமுல்படுத்த வேண்டும்.

இவ்வாறு அண்மையில் கொழும்பில் நடைபெற்ற "சமஷ்டி ஆட்சியில் முஸ்லிம்களின் எதிர்காலம்" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எஸ். அனிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், சமஷ்டி முறையானது இலங்கைக்கே உரிய தனித்துவ தீர்வாக அமைய வேண்டும்.

கனடா, சுவிஸ், தென்அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இத்தாலி, இந்தியா போன்ற பல்வேறு நாடுகளில் பல்வேறு வகையான சமஷ்டி முறை நடைபெறுகின்றது.

அதாவது, தேசியப் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அதற்கென ஓர் ஆட்சி முறை, மொழி மற்றும் பொருளாதார வளங்கள் சம்பந்தமான ஆட்சி முறை, நிலப்பரப்பளவிற்கான ஆட்சி முறை என பல்வேறு வகையில் சமஷ்டி அமைப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற மூன்று இனத்தவர்கள் வாழ்கின்றார்கள்.

இவர்களிடையே சமஷ்டி முறையை அறிமுகப்படுத்துவது மிகவும் கடினமான விடயம். எனவே, இனங்களை அடிப்படையாக கொண்டதாக சமஷ்டி அமைய வேண்டும்.

இன்று எல்லா மாவட்டங்களிலும் இனவாதம் தலை தூக்கியுள்ளது. அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தில் 3 லட்சத்து 60 ஆயிரம் இந்தியத் தமிழர்களும் மாநிலம் அல்லது சுயாட்சி கேட்கும் அளவுக்கு நாடு தள்ளப்பட்டு விட்டுள்ளது.

இந்நிலையில் எமது முஸ்லிம் சமூகத்தினரின் எதிர்காலத்தையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்குப்பகுதிகளில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழும்முஸ்லிம்களது நலனையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தவேண்டும்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற தவறுகள் மீண்டும் நடைபெற இடமளிக்கக் கூடாது.

அரசும் - விடுதலைப்புலிகளும் சமஷ்டி முறையிலான தீர்விற்கு இணங்கியிருக்கும் நிலையில் முஸ்லிம் மக்களுக்கும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வ தற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதனை முஸ்லிம்மக்கள் சரியாக பயன்படுத்திக கொள்ளாமல் உள்ளனர்.

இவ்வாறு எல்லோரும் ஒரு மித்து செயற்படாது விட்டால் அவர்களை சமுதாயம் தூக்கி எறிந்து விடும்.

எனவே, நாம் அனைவரும் இனங்களை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்வது. நல்லாதாக அமையும் என்றார். (உ-10)

# ஓட்டோவில் சென்றவர் பலி

(கொழும்பு)

பொலிஸ் சமிக்ஞையை மீறிச் சென்ற முச்சக்கரவண்டி மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அதில் பயணம் செய்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கட்டுக்குந்தைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணம் செய்த ஏனைய இருவரையும் வாதுவப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ-8)

# லஞ்ச ஊழல் ஆணையாளருக்கு எதிரான குற்றச் சாட்டுப் பிரேரணை சபாநாயகரிடம் இன்று கையளிப்பு

(கொழும்பு)

லஞ்ச ஊழல் தடுப்பு ஆணையாளருக்கெதிராக குற்றச் சாட்டுப் பிரேரணை,கொண்டுவருவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருகின்றன.

கடந்த வியாழனன்று நடைபெற்ற பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் இதற்கான கையொப்பங்கள் பெறப்பட்டன.

இதனை அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை பெறப்பட்ட 75 கையொப்பங்களுடன் இன்று இதனை சபாநாயகரிடம் கையளிக்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அமைச்சர் திசாநாயக்காவுக்கு எதிரான புகார் ஒன்று தொடர்பான விவகாரங்களை ஆணையாளர் கிங்ஸிலி விக்கிரம சூரிய ஆணைக்குழுவின் கொள்கைகள் சட்டவிதிகளுக்கு மாறாக ஜனாதிபதி குமாரதுங்கவுடன் உரையாடி ஆராய்ந்துள்ளார் என்று பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவானது சுயாதீனமாக இயங்குவதுடன் இரகசியங்களைப் பேணவும் வேண்டியதொன்று என்று குறிப்பிடத்தக்கது.

ஆணையாளர் விக்கிரமசூரிய, ஜனாதிபதி மாளிகை சென்று அமைச்சர் திசாநாயக்க பற்றிய விவகாரங்களைவிவாதித்ததாக நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் பாராளுமன்றக குழுக்கூட்டத்தில் தெரிவித்திருந்தார். (உ)

# தையல் பயிற்சி

(சண்டிலிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வருடாந்தம் நடத்தப்படும் தையல் பயிற்சி நெறி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (உ-258)

# நெடுந்தீவு செல்வோர் மீது நீண்ட நேர விசாரணை

(நெடுந்தீவு)

தென்பகுதியிலிருந்து நெடுந்தீவுக்கு தமது உறவினர்களைக் காணச் செல்பவர்கள் கடற்படையினரால் நீண்ட நேர விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னரே அங்கு செல்ல அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான முன்னெடுப்புக்களையடுத்து வெளிநாடுகளிலிருந்தும், தென்பகுதிகளிலிருந்தும், தமது உறவுகளைக் காண்பதற்காக வருபவர்களை நெடுந்தீவுக்குச் செல்ல கடற்படையினரால் உடனடியாக அனுமதிப்பதிலலை எனவும் சிலவேளைகளில் மாத்திரம் நீண்ட நேர விசாரணையின் பின்னர் அவர்களை அங்கு செல்ல அனுமதிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் இந்த செயற்பாடுகள் நெடுந்தீவு மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினருக்கெதிராக மக்களால் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5-48)

# கண்காட்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கற்பித்தல் உபகரண கண்காட்சிப் போட்டி எதிர் வரும் 8 ஆம்திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்ப மாகவுள்ளது.(உ-19)

# புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற போர்வையில் தம்மைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் ஈடுபடுகின்றனராம்

## குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார் மங்கள

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி கேணல் கருணாவின் உரைகள் அடங்கிய இறுவட்டு ஒன்றை பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கடந்த வெள்ளியன்று சபையில் சமர்ப்பித்தார்.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் பற்றிய முழுவிபரங்களும் அவர்கள் ஆற்றிய உரைகளும் இவ்இறுவட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே பாராளுமன்றத்தில் இதனைச் சமர்ப்பிப்பதாக மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாராளுமன்றத்தில் மங்கள சமரவீர மேலும் உரையாற்றுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் இடம் பெறும் கோமாளித்தனங்கள் இதன் மூலம் வெளிப்படும்.

பேச்சு வார்த்தை எனக் கூறிக் கொண்டு, அரசாங்கத்தின் செலவில் சுற்றுலாப் பயணங்களே மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது தாயகக் கொள்கையில் திடமாக உள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நோர்வே அரசு பெற்றுக் கொடுத்துள்ள நவீன வானொலிக் கருவி மூலம் தமிழ் நாட்டிலும் ஈழப்பிரகடனத்தை பரப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் இதற்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு போதும் அனுமதியளிக்கமாட்டார்.

தாய்லாந்து சாகசவிளையாட்டு ஒஸ்லோ சென்று தற்போது பேர்ளினுக்கு செல்ல இருக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் தமிழீழ விடுதலைப புலிகள் தம்மை பலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

நவீன வானொலி உபகரணங்களைப் பயன்படுத்தி, புலிகள் தமிழ் நாடுவரை தமது கொள்கைகளை பிரசாரம் செய்யும் நடவடிக்கை களை மேற்கொள்ளவுள்ளனர்.

புலிகள் வான் படையையும் அமைக்கவுள்ளனர். இதனை எல்லாம் கண்டும் கணாதது போல இருக்கும் பாதுகாப்பு அமைச்சை நினைக்கும் போது கவலையாக உள்ளது.

சமஷ்டி ஆட்சிமுறைபற்றி அறிய 8 அரசியல்வாதிகள் அடங்கிய



குழுவினர் உலகை வலம் வரவேண்டிய அவசியம் இல்லை இதற்கு ஒப்பான தீர்வை நாம் ஏற்கனவே அரசியல மைப்பு கூட்டத்தில் உள்ளடக்கியுள்ளோம் எனவும் தெரிவித்தார். (உ-8)

# கடன் சலுகை

(கொழும்பு)

வங்கிக்கடன் மூலம் கடைகள், வீடுகள் என்பவற்றை வாடகை, அல்லது குத்தகை அல்லது விலைக்குப் பெற்றுக் கொண்டவர்கள், வங்கி கடன்களை செலுத்துவதற்கு விசேட சலுகைக் காலத்தை வழங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி இவ்வாண்டு பூன் மாதம் 30 ஆம் திகதிவரை அவர்கள் இந்தத் தொகையைச் செலுத்த முடியும் என்றும்.

இந்தச் சலுகைக் காலத்தில் கொடுப்பனவுகளைச் செய்பவர்களுக்கு அபராதம் செலுத்தப்படமாட்டாது எனவும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (உ-10)

# தமிழ்ச் செல்வன் - கருணா இன்று பேர்ளின் புறப்படுகின்றனர்

(கொழும்பு)

எதிர்வரும் 7ஆம் திகதி ஜேர்மன தலைநகர் பேர்ளினில ஆரம்பமாக



வுள்ள 5 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் குழுவொன்று இன்று வன்னியில் இருந்து பயணமாகவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் கருணா ஆகிய இருவரும் இன்று வன்னியில் இருந்து புறப்பட்டு கொழும்பு ஊடாக போர்ளின் செல்லவுள்ளனர்.

இதேவேளை, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் லண்டனில் இருந்தும், பொருளியல் மற்றும் புனர்வாழ்வு நிபுணர் ஜோய். மகேஸ்வரன் அவுஸ்திரேலியாவிலிருந்தும், சட்டத்துறை வல்லுநர் வி. உருத்திரகுமார் அமெரிக்காவிலிருந்தும் பேர்ளின் செல்லவுள்ளனர்.



இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் அரச தரப்பு பிரதிநிதிகளான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் நாளை பேர்ளின் பயணமாகவுள்ளதாக அரசதரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-8)

# விடுதலைப் புலிகளுக்கு தனிச் சலுகைகள் வழங்கப்படுவதை என்னால் ஏற்க முடியாது

## ஜனாதிபதி பிரதமருக்கு காட்டமான கடிதம் அதில் ஒரு பிரதி நோர்வே பிரதமருக்கும்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு வானொலி உபகரணங்களை அனுமதித்தது



போன்ற உணர்வுகளைத் தூண்டும் விவகாரங்களில் தன்னையும் அமைச்சரவையையும் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு ஜனாதிபதி சந்திரிக்க பண்டாரநாயக்கா குமாரதுங்க கடந்த 29ஆம திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

நோர்வே பிரதமர் மக்னே பொண்டேவிக்கிற்கும் இக்கடிதத்தின் பிரதியை ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார்.

ஒரு அரசுத்தலைவி என்ற வகையில், தேசிய நலன்களை இணைத்து உருவாக்கக்கூடிய சகல சக்திகளினதும் முழுமையை நான் மனதிற் கொள்ளவேண்டியவர் எனத் தொடரும் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஏனைய பகுதியினருக்கு மறுபக்கப்பட்டு, புலிகளுக்கு மட்டும் வழங்கப்படுவதான தனிச் சலுகைகளை என்னால் அனுமதிக்க முடியாது, சமாதானத்தின் பெயரால் அவ்வாறு என்னால் செய்ய முடியாது. ஒரு பண்பலை ஒலிபரப்புச் சேவையை புலிகள் பெறுவதனால் சமாதான செயற்திட்டம் முன்னேற்றமடையும் என்ற தாங்கள் கூற்றுடனும் என்னால் உடன்படமுடியாது.

ஒரு வானொலி நிலையத்திற்கு வழங்கப்படும் அனுமதி விவகாரத்தில் சட்டரீதியான, தொழில்நுட்பரீதியான, பாதுகாப்புரீதியான, உணர்வுகள் தூண்டப்படக்கூடிய பல விடயங்கள் சம்பந்தப்படுவதால் அது பற்றி எனக்கோ, அமைச்சரவைக்கோ அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நியாயப்படுத்த முடியாதபடி வேறு சில நபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ இத்தகைய வானொலி அனுமதி நிராகரிக்கப்படும் பட்சத்தில் எழக்கூடிய அரசியல் நிலைப்பாடுகள் பற்றியும் சிந்தித்தல் வேண்டும்.

புலிகளுக்கு வானொலி நிலையத்தை அனுமதிப்பதால் சமாதானச் செயற்திட்டம முன்னெடுக்கப்படுவதற்குப் பதிலாக அதன் எதிர் விளைவுகளே ஏற்படும், பரந்தளவிலான மக்கள் போராட்டங்களே வெடிக்கும்.

ஜனவரி 16ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் புலிகளின் வானொலி ஒலிபரப்பில் புலிகளின் போராட்ட வரலாற்றை எடுத்துக் காட்டும் இசை, புகழ்ச்சி, வரலாறுகள் என்பன இடம்பெறுவதாக நான் அறிகின்றேன். இது சமாதானத்திற்கான மக்களின் மனநிலையை பாதிக்கக் கூடியது.

கிளிநொச்சியில் 20 கிலோ மீற்றர்களுக்கு மட்டுமே ஒலிபரப்பு கேட்கும் என்று நிபந்தனைகளில் கூறப்பட்டிருந்தாலும், உண்மையில் மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கெல்லாம் ஒலிபரப்பு தெளிவாக கேட்பதாக அறிகிறேன்.

இவ் ஒலிபரப்பை கொழும்பு வரையும் மட்டுமல்லாது இந்தியாவுக்கும் கேட்கச் செய்ய முடியும் என்று தொழில் நுட்ப வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள. எமது அயல்நாடுகளின் நியாயமான கவலைகளையும் நாம் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வகையிலேயே அனுமதி வழங்கப்பட்டதாக கூறுகின்றீர்களே அந்தகட்டுப்பாட்டை பிரயோகிப்பவர் யார்? வானொலி நிலையம் அமைந்திருககும் பகுதிக்குச் சென்று கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு புலிகள் அனுமதிப் பார்களா?

எனவே, அவர்கள் ஒலிபரப்பும் விட



யம் மற்றும் எவ்வளவு தூரத்திற்கு அது கேட்கிறது என்பன குறித்து மாதம் இருமுறை எனக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி மக்கள்தொடர்பாடல் அமைச்சருக்கும் அறிவித்தல் கொடுக்கவும் என்று குறிப்பிட்டுள்ளார். (உ)

## மருந்தகங்கள் மீது அதிரடி நடவடிக்கை

(சுதுமலை)

சங்கானை, சுழிபுரம், சித்தன் கேணிப்பகுதியுள்ள மருந்து விற்பனை நிலையங்கள் மருந்தகங்கள் என்பன சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினால் கடந்த வியாழன் அன்று திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இப்பரிசோதனையின் போது சில மருந்து விற்பனை நிலையங்களில் சென்ற வருடத்தில் காலவதியான பலவகை மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் மருந்தகங்களில பல நாள் காலவதியான உணவுப்பொருட்களும் விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாக மானிப்பாய், சங்கானை சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராஜா தெரிவித்தார்.

மேற்படி மருந்து விற்பனை நிலையங்களில் கைப்பற்றப்பட்ட காலவதியான மருந்துபொருட்களும் உணவுப் பொருட்களும் விற்பனை நிலையங்களிலிருந்து கைப்பற்றி சீல் செய்யப்பட்டது.

மல்லாகம் மாவட்டநீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட மருந்தக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இப்பகுதியில் உள்ள மருந்தகங்கள் பலவற்றில் அங்ககரிக்கப்பட்ட மருந்தாளர் இல்லை. அத்துடன் மருந்து விநியோகிக்கும் பதிவேடுகள் சரியான முறையில் பூர்த்திசெய்யப் படாமையும்கண்டுபிடிக்கப்பட்டு மருந்தக உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். (உ-252)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மனிதவள அபிவிருத்தி, கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சினால் அரசாங்க மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை இலஙகைப் பல்கலைக்கழகங்களுக்கு 2002/2003 கல்வியாண்டிற்கு அனுமதிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னராக பொது நிர்வாகக் கிளை, மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்ச, "இருசுபாய" பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு அனுபப்பட வேண்டும். (உ-3)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளாந்தெரு மாவடி ஞான வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக் கிழமை கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (உ)

## அன்புவார ஒன்றுகூடல்

(தென்மராட்சி)

வடபிராந்திய பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா இணைப்புக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்பு வார ஒன்றுகூடல் நேற்றைய தினம் திருநெல்வேலியிலுள்ள பகவான் சத்திய சாயிபாபா சேவை நிலையத்தில் நடைபெற்றது.

சாயி நிறுவனங்களின் ஆலோசகர் ஸ்ரீ.எஸ். சிவஞானம் பிரசாந்திக் கொடியை ஏற்றிவைத்தார்.

இணைப்புக்குழுவின் தலைவர் ஆர். வசந்தசேனன் தலைமையில் நடைபெற்ற இவ் ஒன்றுகூடலில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ஞானகுமரன், வலிகாமம் கல்விவலய உதவிப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதயநாதன் ஆகியோர் அன்பு பற்றிய சிறப்புரைகளை ஆற்றினர்.

இணைப்புக்குழுவினால் யாழப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தபபட்ட கட்டுரை, பேச்சு, கவிதைப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற சுமார் 450 மாணவர்களுக்கு நேற்றைய தினம் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (உ-77)

## நவீனமுறையில் மக்கள் கணக்கெடுப்பு

(கொழும்பு)

சனத்தொகைக் கணிப்பீடுகளை நவீன முறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுவீடன் நாட்டின் சர்வதேச அபிவிருத்தி நிலையம் இதற்கான அனுசரணையையும் உதவிகளையும் வழங்கவுள்ளது. (உ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக் கைதடி சித்த மருத்துவத் துறையின் பிரதான கட்டடப் ப்குதியில் கூரைதிருத்த வேலைக்காக அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கட்ட்ட நிர்மாண வேலைகளுக்காக் இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கேள்விப் பத்திரங்கள் பெறத் தகுதியுடையவராவார்

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 07.02.2003 வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா 5,000/=
2. மீள்ளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 500/=

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 18.02.2003 காலை 10.00 மணிக்கு முன் தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக திட்டமிடற் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்

தபால் பெட்டி இலக்கம் 57,

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

(C/5723)



### அரசாங்க அறிவித்தல்

மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்

2003ம் ஆண்டுக்கான பொருட்கள் சேவைகள் வழங்குநர்களை பதிவுசெய்தல்

யாழ்மாவட்ட செயலகத்திற்கு பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மை பதிவுசெய்து கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்ப படிவங்களை மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்று அலுவலக நாட்களில் காலை 9.30 மணிதொடக்கம் பி.ப. 4.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2003.02.18ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் விலாசமிட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பொருள்கள், சேவைகள் வழங்குநர்களை பதிவு செய்தல்" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

01. கண்னி, நிழற்படப்பிரதி, இயந்திரம், றோணியோ இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ் இயந்திரம், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களை வழங்குதலும், அவற்றினை திருத்துதலும்.
02. காகிதாதிகள், எழுதுபொருட்கள் வழங்கல்
03. பாவனைப் பொருட்கள் (ஈர்க்கில்தடி, தும்புத்தடி, சவர்க்காரம், விம், காப்பிக், பைனோல், குளோறின் முதலியன)
04. மரத்தளபாடங்கள்
05. உருக்குத் தளபாடங்கள்
06. கட்டட, தளபாட திருத்தம் செய்வதும் அதற்குரிய பொருட்களும்
07. இரும்புப் பொருட்களும் மற்றும் மூலப்பொருட்களும்
08. பீங்கான் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள்
09. மின் உபகரணங்களும் உதிரிப் பாகங்களும்
10. இறப்பர் முத்திரைகள்
11. சீருடைத் துணிகள் மற்றும் துணிவகைகள்
12. மின்பிறப்பாக்கி, மின்மோட்டார், நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குதலும் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

செ. பத்மநாதன்,

அரசாங்க அதிபரும்

மாவட்ட செயலாளரும்

மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (C/5725)

# மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று எதிரிகளையும் அணைத்து வாழ்ந்தவர் 'அறிஞர் அண்ணா'

''மாற்றான் தோட்டத்து மல்லி கைக்கும் மணமிருக்கும்'' எனச் சொல்லி எதிரிகளையும் நண்பர் களாக்கி மற்றையவர்கள் எண்ணங் களுக்கும் மதிப்பளித்து எதிரிக ளற்ற சூழ்நிலையை உருவாக்கி யவர் பேரறிஞர் அண்ணா!

அண்ணாவின் தோல்விக்காக அரும்பாடுபட்டவர் தந்தை பெரியார். 1967 தேர்தலில் அமோக வெற்றியை ஈட்டினார் அண்ணா. சட்டமன்றத் துக்கு 138 தொகுதிகளில் அமோக வெற்றியீட்டி முதலமைச்சர் ஆகும் நிலையை அடைந்த பின்னும் தந்தை பெரியாரிடம் சென்று ஆசிபெற்றார். பெரியார் அதனைப் பெருமையாகக் கருதினார். திராவிடர் கழகத்தவரை அண்ணாவுக்கு ஆதரவாக இருக்கும்படி அறிக்கை விட்டார்.

இந்திமொழி, இராமாயணம், புராணமதங்கள் ரீதியாக இராஜாஜி அவர்களுடன்நீண்ட காலமாக மோதலாக இருந்தவர் அண்ணா. நேருக்குநேர் ஒரே மேடையில் விவாதம் செய்தவர். இராஜாஜி அவர்களின் சக்கரவர்த்தி திருமகனைக் கிண்டலசெய்தவர்.

### பெருந்தன்மை

ஆனால், ஆட்சிப் பொறுப்பைக் கை யேற்கும் பொழுது இராஜாஜி அவர் களின் அரசியல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். மூதறிஞர் இராஜாஜி என அடைமொழியும் கொடுத்து அவரைப் புகழ்ந்தார்.

எதிர்க்கட்சியில் இருந்தபொழுது கனம் காமராசரோடு முரண்டுப் படாது மக்கள் நலனுக்காகக் கொண்டு வரப்படும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கியவர்.

பொள்ளாச்சியில் இடைத்தேர்தல் ஒன்றின் போது காமராசருக்கு எதிராக தி.மு.க சார்பில் ஆள் போடக்கூடாது எனச் சொன்னவர். காரணம் காங்கிரஸ் வெற்றி பெற்றால் காமராசர் வெற்றி பெற்றிருக்க வேண்டும். காமராசர் வெற்றி பெற்றால் அவர் முதலமைச் சராக முடியும் என காமராசருக்கு மனதில் ஒரு தனி இடம் கொடுத் தவர். அதனால் அண்ணாரைப் பச்சைத் தமிழர் காமராசர் என்றே கூறி வந்தார்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவ ஞானம் அவர்கள் சமய,இதிகாச இலக்கி யங்கள் ரீதியாக நீண்ட காலமாகச் சர்ச்சையில் இருந்தவர். அவரைக் கூடத் திமுக வில் சேர்த்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வைத்தார்.

மேலும் ஈ.வெ.கே. சம்பத், கே.ஏ. மதியழகன் போன்றோருக்கும் கட்சித் தோழர்களுக்கும் முரண்பாடுகள் தோன்றியபோது பெரிதும் மனம் வருந்தி அவற்றைத் தீர்த்திட முயன்றார்.

குறிப்பாகச் சம்பத் அவர்கள்

**அறிஞர் அண்ணா நினைவை ஒட்டியகட்டுரை**

பிரிந்த போது ''தம்பி சம்பத் எப்போது வேண்டுமென்றாலும் வரலாம். கட்சி யின் வாயில் திறந்தே கிடக்கிறது'' என அழைப்பு விடுத்தார்.

சம்பத் அவர்கள் ''தோழர்



அண்ணாதுரை'' என விழித்துக் கூட்டங்களில் பேசியபோது 32 பக்கங்களில் திராவிட நாடு வார இதழில் ''தம்பிக்கு' கட்டுரையில் சம்பத்துடனான தொடர்புகள் பற்றிக் கலங்கிய நிலையில் இருந்து எழுதி, கடைசியில்'பூ இவ்வளவு தானா?' என முடித்துக் கொண்டார்.

### நாட்டு நலனில் அக்கறை

காங்கிரசைச் சேர்ந்த இந்திரா காந்தியைப் பற்றி அமெரிக்காவில் அண்ணாவிடம் கேட்டார்கள். 'இந்தியா வில் பல்வேறு சிக்கல்கள் உள்ள இந்த நிலையில் பாரதப் பிரதமர் சிறப்பாகச் செயல் புரிகிறார்' என்று தெரிவித்தார். அண்ணாவின் இந்தப் பதில் நாட்டு நலனைக் கருத்தில் கொண்டதாகும். அவர் திறமை மிக்க மாநிலத் தலைவர் மட்டுமல்ல இந்திய தேசியத் தலைவர்களில் ஒருவராகவும் வளர்ந்து வருகிறார் என்பதைக் காட்டின.

இராஜாஜி அவர்களின் பிறந்த நாள் விழாவில் அண்ணா ஆர்வத் துடன் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்.

''இராஜாஜி எழுதிய சிறுகதை யானாலும், திருக்குறள் விளக்க உரையானாலும் சட்டங்கள் சொல்வ தானாலும் அவற்றிற்கெல்லாம் அவரது தனித தன்மையை- திறமையை விரிவாகக் காண்கிறோம். அந்த அளவு கூர்ந்த மதியினராகத் திகழ்கிறார்புகழ் பெறுகிறார். இராஜாஜி போன்ற தலைவர்கள் தலைமுறைக்கு ஒருவரேனும் தோன்றாவிடில் அரசியல் தூய்மை பெறாது. நான் அவரி டத்தில் பெருமதிப்போடு கவனிப்ப தெல்லாம் மக்கள் எல்லோரையும் அவர் சிந்திக்கும்படி செய்திருக்கிறார் என்பதேயாகும். இதுவே இராஜாஜி தன் வாழ்க் கையில் பெற்றுள்ள மகத்தான பெருமைக ளுள் தலையாயது என்று நிறைந்த உள்ளத்துடன் கூறினார் அண்ணா.

### வெளிநாட்டுப் பயணம்

முதலமைச்சரான பின்பு முதன் முதலாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு பெற்றார் அண்ணா.

பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். பின்பு ஜப்பான், ஹாங் காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக் கும் சென்றார். ஐக்கிய நாடுகளின் அவைத்தலைவர் ஊதாண்டைச் சந்தித்து உரையாடினார். நியூயார்க், வாஷிங்டன் ஆகிய இடங்களில் இந்திய மாண வர்கள் அவருக்கு மகத்தான வரவேற்பு அளித்தனர்.

யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் அண்ணாவுக்கு இரவு விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அவர்களிடம் பேசிய அண்ணா,'மைய மாநில அரசுத் தொடர்பில் சிக்கல் இருப்பினும் நடைமுறைச் சிரமம் எதுவுமில்லை'' என்றார். சென்றவிடமெல்லாம் தான் ஒரு தேசியவாதி என்பதை நிரூபித்து வந்தார்.

ஜப்பான் நாட்டில், ''என்ன இந்தியாவில் பல அரசியல் பிரச்சி னைகள் இருக்கிறதாமே!'' எனக் கேட்ட போது ''ஜப்பான் நாட்டிலும் பல எரிமலைகள் இருக்கிறதாக அறிகிறேன்'' என உடன் பதிலாக உறைக்க வைத்து வாயடைக்க வைத்தார்.

மாநிலத் தலைவராக அண்ணா இருந்தாலும் இந்தியத் தேசியவாதி யாகவே வெளி உலகங்களில் விளங் கினார்.

### பெரியார் மீது பெரு மதிப்பு

தந்தை பெரியார் ''கண்ணீர்த்துளி'' எனச் சொன்ன போது, 'கண்ணீர்த்துளி' எனத் தமக்கே பெயர் சூட்டிக் கொண்டு பெரியாரோடு கோபப்படாது வாழ்ந்தார்.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து, திராவிட முன்னேற்றக்கழகம் உதய மான போதும், கட்சியின் தலைவர் பெரியார் தான் எனப் பெருந்தன்மை யோடு கூறினார்.

சத்திரசிகிச்சைக்காக அமெரிக்கா சென்ற போது, ஆழமான சிந்தனை யில் 'It Would have been letter if I had been with periyar' எனக் கடிதம் எழுதியிருந்தார். முதலமைச்சர் என்பதை விடப் பெரியாருடனிருந்து மக்களுக்குப் பெருந்தொண்டாற்றி இருக்கலாம் என விரும்பினார்.

பெரியாரின் முதுமைத் திருமணத்தை வெறுத்துப் பிரிந்து சென்றவர், பெரியாரின் விளக்கத்தை, 'சட்டத்தால் அவள் என் மனைவி, வளர்ப்பால் என்மகள்' என்ற விளக்கத்தை அறிந்து தன் தவறிற்காகக் கண்ணீர் சிந்தினார். தான் கண்ட ஒரே தலைவன் மேல் குறை கண்டதற்காகத் தன்னைக் குறைபட்டுக் கொண்டார்.

**அ.பொ. செல்லையா (கனடா)**

### ஒற்றுமையேவெற்றி தரும்

அண்ணாவின் இந்தப் பண்பாடு தமிழ் மக்கள் அனைவருக்கும் இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் இழுத் துப்பிடிக்காமல் ,ஒருவர் சேலையை மற்றவர் உரியாமல், ஒருவரை ஒருவர் இழித்துப் பழிக்காமல் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

மாற்றானையும் மதிக்க வேண்டும். எதிரியிடமும் திறமை இருக்க வேண்டும் என்பதை உணர வேண்டும். அண்ணல் காந்திஅடிகளின் தலைமையில் இந்தியா சுதந்திரம் கண்டது போல தமிழர் ஒன்று பட்டு ஒரே தலைமையில் விடுதலை பெற வேண்டும். இது ஈழத்தமிழினத்துக்கு மிகவும் பொருத்த மாகும்.

அதற்கு மாற்றாரை அணைத்து. அவர்களது ஆற்றல்களையும் பயன் கொண்டு அண்ணாவழி நின்று மாற் றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் இருக்கும் என்பதை உணர்ந்து ஈழத்தமிழினம் ஒன்றுபட அண்ணா பாதையில் நிற்போம்!

## பாவனைப் பொருட்களின் விலைகள் குறையும்

(கொழும்பு)

பாவனைப் பொருட்களின் விலைகள் அடுத்த சில மாதங்களுக்குள் குறைக் கப்படும் என விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இம்மாத இறுதியில் அரிசியின் விலை குறைக்கப்படும் எனவும் ஏப்ரல் மாதமளவில் தேங்காய் மற்றும் மரக் கறிகளின் விலை கணிசமான அளவு குறைக்கப்படும் எனவும் விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

## 1008 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லி புரநாதர் ஆலயத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை 1008 சங்காபிஷேகமும் அன்னதான நிகழ் வும்இடம்பெறவுள்ளது. (உ)

## மலசல கூடங்கள் அமைப்பு

(கல்வயல்)

பட்டினிக் கெதிரான நிறுவனம், பாசையூர் பகுதியில் உள்ள 5 குடும்பங்களுக்கு மலசல கூடங் களை அமைத்துக் கொடுத்துள் ளது.

அத்துடன், 30 மலசலகூடங் களைப் புனரமைக்கவும் நிதி உதவி கள் வழங்கப்பட்டுள்ளன. (உ-111)

## அறுவடை பாதிப்பு

(தனங்கிளப்பு)

தற்போது பெய்துவரும் மழை யின் காரணமாக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

பூலன் பெறக் காத்திருந்த விவ சாயிகள் இதன் காரணமாக பலத்த ஏமாற்றத்தை எதிர்கொண் டுள்ளனர். (உ-37)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட் பட்ட இந்து மாணவர் மன்றங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரை யாடல் இன்று பி.ப 3மணிக்கு யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் செ.க.தனபாலன் தலைமையில் இல. 18, குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது. (உ)

# முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு!

## விட்டுக் கொடுப்புக்கு இதில் இடமில்லை

### ஹக்கீம் திரும்பவும் வலியுறுத்து

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கென தனியான அலகொன்றை பெற்றுக் கொள் வதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ திடமாக இருக்கிறது என கட்சி யின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அட்டாளைச்சேனை தேசியக்கல் வியியற் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங் கொன்றில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அக்கருத்தரங்கில் தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுக் கும், அரசாங்கத்துக்கும் இடையி லான சமாதானப் பேச்சுவார்த்தை கள் நடுக்கட்டத்தை அண்மித்துள்ளன.

இப்பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களின் தனிஅலகு குறித்து எவ்வித கருத்துக்களும் பரிமாறிக் கொள்ளப்படவில்லை.

இரு தரப்பினரும் தமது குறைநிறை களை நிவிர்த்தி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

எது எவ்வாறாயினும் இப்பேச்சு வார்த்தைகளின் மூலம் முஸ்லிம் மக்களுக்கென தனியான ஒரு அலகு பெற்றுக் கொள்வதென திடசங்கற்பம் பூண்டுள்ளேன். எனது கட்சியின்



தலையாய கடமையும் இதுவாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் தற்போது ஏற்பட்டுள்ள பிளவு நிலை காரணமாக முஸ்லிம் களின் தனி அலகுக் கோட்பாட் டினை புறந்தள்ளிவிட முடியாது.

வட-கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு தனியான அலகு ஒன் றைப் பெற்றுக் கொடுப்பதற்கு சகல தரப்பினரும் அங்கீகாரம் அளித் துள்ளனர்.

இதனைப் போலவே முஸ்லிம் மக்க ளுக்கென தனியான அலகு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இவ்விட யத்தில் கட்சி ஒரு போதும் தடுமாற வில்லை என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-8)

## பிரதமர் தலைமையில் வியாழனன்று விசேட அமைச்சரவைக் கூட்டம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட அமைச் சரவைக் கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

*அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு
*அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் சமாதான நடவடிக்கைகள்
*எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவுள்ள பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள்
*அரசின் கொள்கைத்திட்டம்

ஆகியன குறித்து இக்கூட்டத் தில் ஆராயப்படவுள்ளது.

முக்கிய வேறு தீர்மானங்களும் இக்கூட்டத்தில் எடுக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அன்றைய தினமே பிரதமர் அரசின் கொள் கைத் திட்டத்தையும் வெளியிட வுள்ளார். (உ-3)

## அமெரிக்காவுக்கு எதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொள் ளவுள்ள தாக்குதலைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை கொள் ளுப்பிட்டியில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள முஸ்லிம் சமூக நல அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் களும் பௌத்த பிக்குமாரும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஈராக்கை யும், சதாம் ஹுசைனின் வீரச் செயலையும் ஆதரித்து கோஷங் களை எழுப்பினர்.

அமெரிக்காவையும், அமெரிக்க ஜனாதிபதியையும் வன்மையாகக் கண்டித்து இறுதியில் அமெரிக்கா வின் தேசியக் கொடியும் எரிக்கப் பட்டது. (உ-3)



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம்களில் ஒரு பகுதியினர்.

ஐ.நா பாதுகாப்புச் சபையில்

# ஈராக் கருத்துக் கூற சந்தர்ப்பம் வேண்டும்

## சிரியா வலியுறுத்து

(டமஸ்கஸ்)

ஐநா பாதுகாப்பு சபையில் உரையாற்ற ஈராக்கிற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என சிரியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாரிய சேதங்களை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் ஈராக் வசம் இருப்பதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை அடுத்தே சிரியா இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, சிரியாவின் இந்த கோரிக்கை குறித்து அடுத்தவாரம நடைபெறவுள்ள பாதுகாப்பு சபை கூட்டத்தின் பின்னரே கவனத்தில் கொள்ளப்படும் என ஐ.நா தெரிவித்துள்ளது.

15நாடுகளைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் சிரியாவும் அங்கம் வகிக்கின்றது.

*ரஷ்யா வரவேற்பு*

சிரியாவின் வேண்டுகோளை ஐக்கியநாடுகளுக்கான ரஷ்யத் தூதுவர் ஷேக்லு..க்கு ஆதரித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் படி நாளை மறுதினம் இடம்பெறவுள்ள பாதுகாப்புச் சபை கூட்டத்தில் உரையாற்றுவதற்கு உரிமையுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் ஈராக்கின் ஆயுதத்திட்டங்கள் தொடர்பில் ஆற்றும் உரையை கேட்பதற்காக ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, ஸ்பெயின், பல்கேரியா, மெக்ஸிக்கோ, சிலி, பாகிஸ்தான், சிரியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் நியுயோர்க் செல்லவுள்ளனர்.

*பிரி.பிரதமர் நம்பிக்கை*

அதேசமயம் ஈராக்குடனான யுத்தத்தை அங்கீகரிக்கும் வகையிலான இரண்டாவது தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளெயர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஈராக் விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்சுடன் ஆலோசனை நடத்திய பின் ரொனிபிளெயர் விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களுடன் பேசிய போதே இவ்வாறு கூறியுள்ளார். (பி-9,2)

# எரிபொருளுக்குத் தட்டுப்பாடு வராது

## சவூதிஅரேபியா உறுதி

(ரியாத்)

உலக சந்தையில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதென சவூதிஅரேபியா அறிவித்துள்ளது.

தேவையான அளவுக்கு எரிபொருளை உற்பத்தி செய்து உலக சந்தைக்கு விநியோகிக்கப் போவதாக சவூதி அரேபியா உறுதி அளித்துள்ளது.

அத்துடன், ஏற்றுமதி செய்யும் பொருட்டு நாளொன்றுக்கு 24.5மில்லியன் பீப்பா மசகு எண்ணையை உற்பத்தி செய்ய உள்ளதாக அந்த நாடு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் உலக சந்தையின் தேவையை ஏனைய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளால் பூர்த்தி செய்ய முடியாதென அச்சம் தெரிவிக்கப்ட்டுள்ளது

அத்துடன், எண்ணெய் விலை பன்மடங்காக அதிகரிக்கலாமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளமை தெரிந்ததே. (பி-9)

# கம்போடியா - தாய்லாந்து உறவுகள் மேலும் மோசமடையும் அறிகுறி

## பாங்கொங் கலவரங்களை அரசர் தலையிட்டுத்தடுத்தார்

(பாங்கொக்)

பாங்கொக்கிலுள்ள கம்போடிய தூதரகத்தின் முன்னால் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்த ஆயிரக் கணக்கான மக்கள் தாய்லாந்து அரசா கேட்டுக் கொணடதால் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

கம்போடிய நாம்பென் நகரில் தாய்லாந்து தூதரகம் தீவைக்கப்படுவதையும் கொள்ளையடிக்கப்படுவதையும் காட்டும் படங்களைப் பத்திரிகைகளில் பார்த்த தாய்லாந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பாங்கொக்கிலுள்ள கம்போடிய தூதரகத்தின் முன் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்கள் நாட்டு தூதரத்துக்கும் தூதரக ராஜதந்திரிகள் மற்றும் பணியாளர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்க அந் நாடுதவறி விட்டதெனக் கூறியே இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

கம்போடியதூதரக வாயில் கேற்றிலிருந்த அடையாளப் பலகையை இழுத்துக் கீழே தள்ளி அவர்கள் அதன் மீது ஏறி மிதித்தனர். ஆர்ப்பாட்டம் கட்டு மீறிப் போய்க்கொண்டிருந்த வேளையில் தாய்லாந்து அரசரின் வேண்டுகோள் வந்தது. வன்முறையில் எவரும் ஈடுபடலாகாது மக்கள் கூட்டம் கலைந்து செல்ல வேண்டும் என்ற அரசரின் செய்தியை அதிகாரி ஒருவர் வாசித்துக் காட்டினர். அதைத் தொடர்ந்து மக்கள் அரசருக்குரிய தேசியகீதத்தை இசைத்தபடி கலைந்து சென்றனர்.



நடிகை சுவனன் கொன்யிவ

இதே் சமயம் தாய்-கம்போடிய உறவுகள் மேலும் மோசமடைந்து வருகின்றன.

கம்போடியாவுடானான எல்லா தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டனவென்று பிரதமமந்திரி தாக்சின் ஹிவைத்ரா பத்திரிகையாளர்களிடம் கூறினார். நாங்கள் புண்படுத்தப்பட்டு விட்டோம். கம்போடியாவுடனான எல்லா நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு விட்டன. கம்போடியர்கள் எவரும் எமது நாட்டுக்குள் வர அனுமதிக்கப்பட மாட்டார்கள் எமது மக்களையும் நாம் திருப்பி அழைத்து விடுவோம் என்றார் அவர்.

கம்போடியர் அனைவரையும் சுற்றி வளைத்து எல்லையில் கொண்டு போய்த் தள்ளி விடும்படி உத்தரவு பிறப்பித்திருப்பதாக தாய் பாதுகாப்பு அமைச்சர் லகரைல் தம்மராக் இஸரங்குரா நா ஆயுத்தமா கூறினார்.

கம்போடியாவிலுள்ள தாய் தூதர் சுவர் ஒன்றின் மீது ஏறி தப்பியதாகவும் மீனவர் வள்ளம் ஒன்றின் மூலம் கலவரக் கும்பலிட மிருந்து தப்பியதாகவும் கூறப்படுகிறது.

கலவரத்துக்கு காரணமான முக்கிய புள்ளிகளைக் கைது செய்துள்ளதாக கம்போடிய அதிகாரிகள் கூறினர். தாய்லாந்து நடிகையாக சுவானன் கொங்கியிங் வெளியிட்டதாக வந்த ஒரு கருத்தை அடுத்தே கம்போடியாவில் தாய்லாந்துக்கு எதிரான கலவரங்கள் வெடித்தன.

தாய்லாந்தின் அங்கோர்வாட் ஆலயங்களை கம்போடியா திருடி விட்டதாகவும் ஆனால் அந்த நாட்டில் ஒரு போதும் நிகழ்ச்சிகள் நடத்தப்போவதில்லையென்றும் இந்த நடிகை கருத்து வெயியிட்டிருந்தாகக் கூறப்படுகின்றது.

ஆனால் நடிகை தாம் அப்படி கூறவில்லையென்று மறுத்துள்ளார்.

கம்போடியாவில் விரைவில் நடக்கவிருக்கும் தேர்தலுக்கும் இந்த குழப்பங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் மோசமடைந்ததால் தாய்லாந்தில் உள்ள கம்போடிய தூதர் நாட்டை விட்டு எழும்பும் படி கூறப்பட்டுள்ளார் தூதரகப் பொறுப்பதிகாரியின் தரத்துக்கு இறக்கப்பட்டுள்ளார். (பி)

# இந்தோனேஷியாவில் கடும் மழை

## 20பேர் மரணம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் பெய்து வரும் கடும் மழையினால் பல இடங்களில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதால் 20பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காணாமல் போயுள்ளனர்.

இந்தோனேஷியாவின் மணல் வங்கிப் பிரதேசத்தில் இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

சுமார் 100ற்கும் மேற்பட்ட வீடுகள், மண்சரிவினால் மூடப்பட்டுள்ளது எனவும், இவற்றை மீட்கும் பணிகள், நடைபெறுவதாகவும் அவுஸ்ரேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர். (பி-2)

WORLD NEWS உலக தரிசனம்

# கொலம்பியா ஓட விபத்துக்கு சதிவேலை காரணம் ?

## அமெரிக்க அதிகாரிகள் சந்தேகம்

(வாஷிங்டன்)



கொலம்பியாவில் பயணம்செய்த 7விஞ்ஞானிகள்

விண்வெளியில் மிக சிக்கலான பல ஆராய்ச்சிகளை முடித்துக் கொண்டு மிக உற்சாகமாக பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், கொலம்பியா விண்வெளி ஓடம் விண்ணிலேயே வெடித்துச் சிதறியதில் அதில் பிரயாணம் செய்த 7வீரர்களும் பலியாகியுள்ளனர்.

இந்த விண்வெளி ஓடத்தில் இஸ்ரேலிய வீரர் ஒருவரும்(சிலான் ரமோன்) முதன் முறையாக சென்றிருந்தமையால் ஓடம் வெடித்துச் சிதறியதற்கு இஸ்லாமிய தீவிரவாதிகளின் சதிவேலை சம்பந்தப்பட்டிருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் கருதுகின்றனர்.


இந்திய நேரப்படி சனிக்கிழமை இரவு 7.46மணிக்கு இந்த ஓடம் தரையிறங்கியிருக்க வேண்டும்.

இந்த ஓடத்தில் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உள்பட 7 பேர் பயணம் மெற்கொண்டனர். கல்பனா சாவ்லா கடந்த 5ஆண்டுகளில் 2ஆது முறையாக விண்ணுக்குச் சென்றார்.

விண்வெளியில் 16நாட்கள் ஆராய்ச்சியை முடித்துக் கொண்டு கொலம்பியா ஓடம், சனிக்கிழமை பூமிக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது இந்தக் கோர விபத்து நடந்தது.

டல்லாஸ் மற்றும் போர்த்வொர்த் பகுதியில் கொலம்பியா ஓடத்தின் சிதறிய பாகங்கள் விழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஓடத்தின் பாகங்களில் நச்சுப் பொருள்கள் உளளதால் அவற்றைப் பொதுமக்கள் யாரும் தொட வேண்டாம் என நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் எச்சரித்துள் ளது.



விபத்தில் இறந்த இஸ்ரேல் வீரரின் மனைவி ரோனா ரமோன் மற்றும் மகள் நோரா ஆகியோர் செய்தியைக் கேட்ட அதிர்ச்சியில்...



கென்னடி ஆய்வு மையத்தில் சோகத்துடன் செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேலியர்கள்

தரையிறங்கும் போது விண்வெளி ஓடங்கள் விபத்துக்குள்ளாகி வீரர்களை நாசா இழந்தது இதுவே முதல்முறை. 1986இல் விண்ணில் செலுத்தப்பட்ட சாலஞ்சா ஓடம். புறப்பட்ட சில நிமிடத்திலேயே வெடித்துச் சிதறியது. அதிலிருந்த வீரர்கள் அனைவரும் இறந்தனர்.

ஜனவரி 16ஆம் திகதி விண்ணுக்குச் சென்ற வீரர்கள் மனித உடல்கள் குறித்த ஆய்வு, புற்றுநோய் செல் வளர்ச்சி மற்றும் எடையற்ற தன்மையின் போது பூச்சிகளில் காணப்படும் மாற்றங்கள் ஆகியவை உள்பட 80 ஆராய்ச்சிகள் ஈடுபட்டனர்.(பி)

தன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப்படும்
-குறள்-

வலம்புரி

## அதிகரித்து வரும் வீதி விபத்து

யாழ்ப்பாணத்தில் இப்போது வீதி விபத்துக்களின் எண்ணிக்கை தாராளமாக அதிகரித்துள்ளது. வீதி விபத்துக்களுக்குப் பற்றி போதிய அறிவின்மையும் பிரஜைகள் மீது அக்கறையற்ற தன்மையும் இவ்விபத்துக்கு காரணங்கள் எனக்கொள்ளலாம்.குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் செல்லுகின்ற இளைஞர்கள் பாதசாரிகள் பற்றிய எந்தச் சிந்தனையுமின்றி கட்டுப்பாட்டுக்குள் அடக்க முடியாத வேகத்துடன் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துவதும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்கு காரணமாக உள்ளது.

இவை தவிர தற்போது யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற விபத்துக்கள் அந்த விபத்தினால் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள் இவையெல்லாவற்றையும் ஆய்வு செய்து பார்க்கும் போது விபத்துக்கான காரணம் கட்டாக்காலி நாய்கள் என்பது புலனாகும். வீதிகளெங்கும் கட்டாக்காலி நாய்கள் அங்குமிங்கும் ஓடித்திரிவதால் வாகனங்களில் செல்வோர் நாய்களுடன் மோதி விபத்துக்குள்ளாகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடந்த விபத்துக்களில் பெரும்பாலானவை கட்டாக்காலி நாய்களினால் ஏற்பட்டது என்பதை யாழ் போதனாவைத்திய சாலை பதிவுகள் துலாம்பரப்படுத்தியுள்ளன. எனவே இவ்விடயத்தில் உள்ளூராட்சி சபைகளான பிரதேச சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் மற்றும் மாநகர சபை என்பன அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

உள்ளூராட்சி சட்டப்பிரமாணங்களின்படி நாய் வளர்ப்போர் அதற்கான அனுமதிப்பத்திரத்தை அவர்கள் வசிக்கின்ற பகுதிக்குரிய உள்ளூராட்சி மன்றங்களில் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி நாய்வளர்ப்பவர்கள் எக்காரணம் கொண்டும் தாம் வளர்க்கும் நாய்களை தமது வீட்டிற்கு வெளியே விடுவதற்கு அனுமதி கிடையாது அதாவது நாய் வளர்ப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு இருந்தாலும் குறித்த நாய் வீதிக்கு வருமாயின் அது கட்டாக்காலி நாயாக கருதப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சட்டங்கள் இருக்கின்ற போதிலும் அவை புத்தகப்பதிவுகளாக இருக்கின்றனவே தவிர நடைமுறையில் அமுல்படுத்தப்படுவதாக தெரியவில்லை எனவே உள்ளூராட்சி மன்றங்கள் கட்டாக்காலி நாய் ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக செயற்படுவதன் மூலம் வீதிவிபத்துக்களை தடுக்கவும் மனித உயிர்களைப் பாதுகாக்கவும் முடியும். இதற்கான திட்டங்களை உடனடியாக வகுப்பது காலத்தின் தேவையாகும்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிகளுக்கு பாராட்டுத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசகர் பிறைம் ஹண்டுறான் பாராட்டியுள்ளார்.

இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பிறைம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிகளை மதிப்பீடு செய்துள்ளார்.

இம்மதிப்பீட்டுப் பணி தொடர்பாக செய்தியாளர்களிடம் விளக்கமளிக்கையில் ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கன.

காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவது, சொத்து இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பது, சிறைக் கைதிகளைப் பார்வையிடுவது, உறவினர்களுக்கு தகவல் கொடுப்பது போன்ற இவர்களின் பணிகள் பாராட்டுக்குரியன என்று தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்காக அமைக்கப்படவுள்ள ஆலோசனை குழு சம்பந்தமாக ஆலோசனை வழங்குவதற்காகவே பிறைம் இலங்கை வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மாணவனின் மனநிலை பாதிப்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் கண்டி வைத்திய சாலை மனநிலைப்பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட மாணவர்களால் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டதனாலேயே மேற்படி மாணவரின் மனநிலை பாதிப்படைந்துள்ளது என வைதத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக கழகத்தில் பகிடிவதைகாரணமாக மூன்றாம் வருடமாணவன் ஒருவன் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து, இரண்டரை மாதங்களாக மேற்படி பல்கலைக்கழகம் மூடப்பட்டு மீண்டும் சென்ற வாரம் திறக்கப்பட்டமை தெரிந்ததே. (உ-8)

# அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன யாழுக்கு இரகசிய விஜயம்

(தென்மராட்சி)

புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜயவர்த்தனா நேற்று முன் தினம் யாழ் நகருக்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு வந்திருந்தார்.

இவர் யாழ்ப்பாணத்தில் ஜீ.ரீ சற் நிறுவனத்தின் உயர் மட்ட அதிகாரிகளுடன்,வடபகுதிப் பாடசாலை மாண்வர்களைத் தென்பகுதிக்கு நல்லெண்ண விஜயத்தில் அழைத்துச் செல்வது பற்றி கலந்துரையாடியதாகத் தெரியவருகின்றது.

இதே வேளை, இம் மாணவர்களை நேற்றைய தினம் அழைத்துச் செல்வதற்கு எடுத்த முயற்சிகள் யாவும்பலனளிக்காமல் போயுள்ளன.

இது இவ்விதமிருக்க எதிர்வரும் 7ஆம் திகதியன்றே வடபகுதி பாடசாலை மாணவர்கள் சுமார் 800 பேர் வரை தென்பகுதி செல்லவுள்ளனர். எனவும் தெரியவருகிறது.

அமைச்சின் யாழ்ப்பாணவிஜயம் இறுதி நேரம் வரை ரகசியமாகவே இருந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

இதேவேளை,கடந்த வெள்ளியன்று அமைச்சர் யாழ் வரத் திட்டமிட்டிருந்தமையும், இறுதி நேரத்தில் அவரது விஜயம் ரத்தானதும் அமைச்சரின் வருகையை எதிர்த்து குடாநாட்டில் பரவலாக கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

# கொழும்பு மாநகரை முற்றுகையிட முயற்சி செய்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் வன்னி செல்வாராயின், இலட்சக்கணக்கான மக்களை ஒன்று திரட்டி தாம் கொழும்பு மாநகரை முற்றுகையிடப் போவதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஜே.வி.பி. கிளைகளுக்கான மாநாடு பொறளை மைதானத்தில் அண்மை யில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே விமல் வீரவன்ச இதனைத தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச அங்கீகாரம பெற்றுக் கொடுக்கவே ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர நாயகம் கோபி அனான் இலங்கைக்கு வரவுள்ளார் என்றார். (உ-10)

# வன்னி வருமாறு கூட்டமைப்புக்கு விடுதலைப் புலிகள் அழைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை வன்னிக்கு வருமாறு அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இரு தரப்பினருக்குமிடையிலான சந்திப்பு இம்மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முன்னெடுப்புக்கள் மற்றும் தற்போதைய அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வுக்கு அரசு-புலிகள் தரப்புகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள இணக்கப்பாடு தொடர் பாகவும் இரு தரப்பினரும் கலந்துரை யாடவுள்ளனர்.

மேலும், யாழ். குடாநாட்டு அபிவிருத்தி தொடர்பாகவும் இச்சந் திப்பில் ஆராயப்பட வுள்ளது. (உ-3)

# 350 மில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்கியது

(கொழும்பு)

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படவுள்ள வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் 350 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கவுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜேர்மி காட்டர் கருத்து வெளியிடுகையில், இக்கடன் உதவி எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் வழங்கப்படும்.

இக்கடனுதவி மூன்று வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட கடனின் தொடர்ச்சியாகவே வழங்கப் படுகிறது என்று தெரிவித்தார்.

இதேவேளை, 2001 ஆம் ஆண்டு 266 மில்லியன் டொலர்களையும், சென்ற ஆண்டு 1.55 பில்லியன் டொலர்களையும் இந்நிதியம் இலங்கைக்கு கடனாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தமிழ் மொழிப் பயிற்சி முடித்து மற்றொரு தொகுதிப் பொலிஸார் வெளியேற்றம்

(கொழும்பு)

தமிழ்ப் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழிப் பயிற்சி பெற்ற பொலிஸாருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் மக்களின் நன்மை கருதி அரச கரும மொழித் திணைக் களத்தின் அனுசரணையுடன் இந்த 38 பொலிஸ் உத்தியோகத்தரும்தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் இவர்கள் விரைவில் தமிழ்ப் பகுதிகளில் நியமனம் பெறுவார்கள் என்றும் தெரிவித்தார். (வ)

# கண்டி பௌத்த துறவிகள் 10ஆம் திகதி யாழ்.வருகை

(கொழும்பு)

. கண்டி மாவட்ட சைவக்குருக்கள், பௌத்த் துறவிகள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கான 3 நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இக்குழுவினர் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிடுவதுடன், விசேட வழிபாடுகளிலும கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையும் இம்மாத நடுப்பகுதியில் வடபகுதிக்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

இதேவேளை, நல்லிணக்கப் பயணம் மேற்கொண்டு சுமார் 100 பௌத்த மதத் துறவிகள் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-8)

## ௐ தினசரி தியானம்

### சரணாகதி

கடவுள் உன் உள்ளத்திலிருந்து ஆள்கின்றார். தேகம், மனம், இந்திரியங்கள் இவற்றை அவரே ஆட்டி வைக்கிறார். எனவே அவருடைய கைக்ளில் ஒரு கருவியாக இரு. உன் சேவைக்கு நன்றியும் பாராட்டும் எதிர்பாராதே.

"நான் உன்னுடையவனே. எல்லாம் உன்னுடையதே உன் கட்டளையை சிரமேற்கொள்வேன்" என்ற மந்திரத்தை அடிக்கடி சொல். நிபந்தனை அற்ற சரணாகதி மூலம் உன் அகம்பாவத்தை அறு. உன் சரணாகதி பு,ரணமாயும், உண்மையாகவும் இருந்தால், தெய்வீக அருள் உன்னிடம் தங்கு தடையில்லாமல் சுரக்கும்."

சுவாமி சிவானந்தர்

# களுத்துறை சிறைச்சாலை கூரைமீது அமர்ந்து தமிழ்க்கைதி உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் பயங்கரவாத மற்றும் அவசர கால தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதி ஒருவர் நேற்றுக்காலை தொடக்கம் சிறைச்சாலைக் கூரை மேல் ஏறி இருந்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தனக்கு எதிரான வழக்கு விசாரணையை துரிதப்படுத்த வேண்டும் அல்லது தன்னை யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் பிரஸ்தாப கைதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளதாகவும்,

இம்முறை தாங்கள் ஆரம்பிக்க இருக்கும் உண்ணாவிரதத்தில் அரசியல்வாதிகள் எவரும் நுழைந்து பொய்யான வாக்குறுதிகளைத் தரக் கூடாது எனவும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

### வவு. ஆதார வைத்தியசாலையில்

# இரு தலையுடன் பிறந்த ஆண் குழந்தை இறந்தது

(வவுனியா)

வவுனியா மாவட்ட ஆதார வைத்தியசாலையில் இரு தலையுடன் கூடிய ஆண் குழந்தை சத்திர சிகிச்சை மூலம் பிரசவிக்கப்பட்டது. எனினும் குழந்தை உயிர் பிழைக்க வில்லை.

நேற்றைய தினம் இச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 90 நிமிடங்களாக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதும் அது பயனளிக்காமல் போய் விட்டதாக டாக்டர் ரி.ஜெயதரன் தெரிவித்தார். (வ)

### மைலோ கிண்ண உதைபந்தாட்டம்

# யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட மைலோகிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

நேற்றுக் கொழும்பு வேலுவன தேசியக் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் நடை பெற்ற இறுதிப் போட்டியில் வேலுவன தேசியக் கல்லூரி 6:3என்ற கோல் கணக்கில் வென்று மைலோ கிண்ணத்தை சுவீகரித்தது. போட்டி ஆரம்பமாகி இடைவேளை வரை வேலுவென அணி நான்கு கோல்களை அடித்தது.

எனினும், இடைவேளைக்குப் பின் மத்திய கல்லூரி அணி அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டது. இக் கோல்களை கமிலஸ், சுரேஸ்ராஜா, லோறன்ஸ் ஆகியோர் தொடர்ச்சியாக அடித்தனர். மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று இறுதிப் பத்து நிமிடம் இருக்கும் நிலையில் வேலுவென தேசியக் கல்லூரி மேலும் இரண்டு கோல்களைப் போட்டு வெற்றி பெற்றது.

யாழ்.மாவட்ட அணி பத்து வருடங்களுக்குப்பின் கலந்து கொண்டு இரண்டாவது இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# நினைவுத்தூபி அமைக்க கடற்படையினர் தடை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை கோபாலபுரம கிராமத்தில் விடுதலைபபுலிகளினால அமைக்கப்பட்டு வரும் நினைவுத் தூபியின் புனர் நிர்மாணப் பணியினைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு கடற் படையினர் தடைவிதித்துள்ளனர்.

1990ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அப்பகுதியில் வீரச் சாவ்டைந்த விடுதலைப் புலிகளின் நினைவாக நினைவுத் தூபி அமைக்கப்பட்டிருந்தது. அந்த நினைவுத்தூபி படையினரால் ஏற்கனவே இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது நினைவுத்தூபி விடுதலை புலிகளினால் புனரமைப்பு செய்யப்பட்டு, அது முடிவடையும் தறுவாயில், நேற்று முன்தினம நள்ளிரவு முதல் அந்தப்பகுதியை முற்றுகையிட்டுள்ள படையினர் புனரமைப்புப்பணிக்குத் தடை விதித்துள்ளனர். (த)


# பதவி வெற்றிடம்

பிரதேச செய்தியாளர்கள் (ஆண்கள்)

**பின்வரும் பிரதேசங்களில் வெற்றிடங்களை நிரப்பவும், மேலதிகமாகவும் செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.**

| | |
|---|---|
| நீராவியடி | தெல்லிப்பழை |
| கொக்குவில்-கிழக்கு | அளவெட்டி |
| கொக்குவில்-மேற்கு | பண்டத்தரிப்பு |
| கோண்டாவில்-கிழக்கு | மாதகல் |
| கோண்டாவில்-மேற்கு | இளவாலை |
| உரும்பிராய் | சில்லாலை |
| ஊரெழு | நாவாந்துறை |
| அச்செழு | கொட்டடி |
| புன்னாலைக்கட்டுவன்-தெற்கு | குருநகர் |
| புன்னாலைக்கட்டுவன்-வடக்கு | பாசையூர் |
| தாவடி | கொழு ம்புத்துறை |
| இணுவில் | அரியாலை |
| மருதனார்மடம் | நல்லூர் |
| சுன்னாகம் | |

**தகைமை - க. பொ. த (சாதாரணம்) சித்தி**

தகுதியும், ஆர்வமும் உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்கரலிக முகவரி, பிறந்த திகதி, தே.அ.அ.இல, கி.சே.பிரிவு, பி.செ.பிரிவு, குடியியல் தகைமை, கல்வித் தகைமை, தொழில் புரிபவராயின் தொழிலின் தன்மை, தொழில் புரியும் திணைக்களம், இடம், மேலதிகத் தகைமை ஆகியன உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
15, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு 10.02.2003 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தவறாது குறிப்பிடவும்

வலம்புரி ஆளணி முகாமையாளர்


### கால்களை கல்லுடன் கட்டி

# கிணற்றில் விழுந்து தற்கொலை

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் 54 வயது நிரம்பிய நபர் ஒருவர் பாரிய கல் ஒன்றுடன் தனது இருகால் களையும் பிணைத்தவாறு கிணற்றுக்குள் குதித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்றையதினம் இச்சம்பவம் இடம்பெற்றது. தொய்வு நோயின அவஸ்தையைத் தாங்க முடியாமலே இவ்வாறு தற்கொலை செய்த கொண்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (த-28,63)

# இலங்கை அரசு கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் கொலம்பியா விண்வெளி ஓடம் வீழ்ந்து நொருங்கிய துயரச் சம்பவத்திற்கு இலங்கை அரசு கவலை தெரிவித்துள்ளது.

இதில் பயணம் செய்த ஏழு விண்வெளி வீரர்களின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் இலங்கை அரசும், மக்களும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

### தொண்டர்....

மாறு கோரி அண்மையில் பத்தர முல்லையில் உள்ள கல்வி அமைச்சின் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியமையும், அவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

### சிறுவர்கள்....

யாழ்ப்பாணம், மல்லாவி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இயங்கி வரும், இந் நிதியத்தின் கிளை அலுவலகங்களிலும் இத்தகைய முறைப்பாடுகளைச் செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளனர். (வ)

### புலிகளின்....

கருணா கிழக்கில் இருந்தும் இன்று கொழும்பு செல்வர்.

தமிழ்ச்செல்வன் குழுவினர் கொழும்பில் இருந்தும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் லண்டனில் இருந்தும் விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வு நிபுணர் ஜோய் மகேஸ்வரன் அவுஸ்ரேலியாவில் இருந்தும் சட்டவல்லுநர் உருத்திரகுமார் அமெரிக்காவில் இருந்தும் பேர்ளின் செல்லவுள்ளனர். (த,வ)

### பொ.ஐ.முன்னணி....

ஜே.வி.பியினர் விதித்துள்ள நிபந்தனை பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய புள்ளிகள் பலரை அதிருப்திக்குள்ளாக்கியிருப்பதாகவும், இருப்பினும் ஜே.வி.பியினரின் நிபந்தனைக்கு இணங்கிப் போவதற்கு அனுரா பண்டார நாயக்காவும் மங்கள சமரவீராவும் விருப்பம் தெரிவித்துள்ள தாகவும் தெரிவருகிறது. (த)

### துப்பாக்கி.....

உயிரிழந்தவர் தேசிய ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் எனவும் துப்பாக்கி பிரயோகம் மேற் கொண்டவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் ஒருவரின் பாதுகாப்புக் பிரிவிலிருந்து விலகி மீண்டும் அப்பிரதேசத்தில் கடமைக்காக இணைந்தவர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (ந-5)

# "பாதுகாப்பு இல்லம்" வழக்கை வாபஸ் பெறுமாறு உத்தரவு

(கொழும்பு)

இராணுவத் தளபதி, இராணுவப் புலனாய்வு பணிப்பாளர், மிலேனியம் சிற்றியில் இராணுவப் பாதுகாப்பு இல்லம் ஒன்றை பேணிவந்தவர்களான ஊடுருவித் தாக்கும் அணியைச் சேர்ந்த நான்கு படையினர், ஒரு படையதிகாரி ஆகியோருக்குக்கெதிராக உதவிப் பொலிஸ் அதிகாரி குலசிறி உடுகம்பொலவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மீளப் பெறுமாறு பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அவர்கள் கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்று நம்புவதற்கு சான்றுகள் எவையும் இல்லை. "லோங் றேஞ்சர்" எனப்படும் இந்த எதிரிப் பிரதேசத்தினுள் ஊடுருவி வேவு பார்க்கும் பிரிவு, விடுதலைப்புலிகளுக்கு எதிரான இரகசிய இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது, இராணுவத்தின் உயர் அதிகாரபீடத்தினர் இது பற்றி நன்கு அறிந்தேயிருந்தனர். இவ்வாறு சொலிசிற்றர் ஜெனரலால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் சட்டமா அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துருகிரியாவில், மிலேனியம் சிற்றியில் அமைந்திருந்த இந்த பாதுகாப்பு இல்லம், அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை படுகொலை செய்வதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக ஆரம்பத்தில் ஐ.தே.மு நம்பியிருந்தது. இந்தப் பாதுகாப்பு இல்லத்தைப் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழு முற்றுகையிட்டு கைதுகளை மேற்கொணடிருந்தது. ஆயுதங்களும கைப்பற்றப்பட்டிருந்தன. இதன் மூலம் அவர்களின் அடையாளங்களும், தகவல் கொடுப்பவர்களின் விபரங்களும் வெளியாகியிருந்தன. குலசிறி உடுகம பொலவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பதிவுகளை ஆராய்ந்தபின் ஆதாரங்களில்லாத இவ் வழக்கை வாபஸ் பெறுமாறு சட்டமா அதிபர் கேட்டிருந்தார். (ந)

# பெண் சடலமாக மீட்கப்பட்ட செய்தி வெறும் வதந்தியாம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை பழைய பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில், கடந்த 31ம் திகதி பெண்ணெருவரின் சடலம் மீட்கப்பட்டதாக வெளியான செய்தி வெறும் வதந்தி எனத் தெரிய வந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது: இடம் பெயர்ந்து அப்பகுதியில் வசித்து வந்த பிரஸ்தாப பெண் காணாமல் போயிருப்பதாகவும். அவ் வீட்டில் வசித்து வந்த நபர் தலைமறைவாகியிருப்பதாகவும் செய்தி பரவியது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதி இளைஞர்கள் தேடுதல் வேட்டையில இறங்கி உடுப்பிட்டி கன்னாவெட்டைப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இருந்து இருவரையும் கண்டு பிடித்தனர்.

இருவரையும் கையும் மெய்யுமாக, பிடித்த இளைஞர்கள், பெண்ணை அவரது உறவினர்களிடம் ஒப்படைத்து விட்டு பிரஸ்தாப நபரை பொலிஸ் நிலையத்திற்கு ஆட்டோ ஒன்றில் கொண்டு சென்றனர். இடை வழியில் ஆட்டோவில் வந்தவர்களை தாக்கிவிட்டு பிரஸ்தாப நபர் தலைமறைவாகி விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-63)

### முன்னாள் தளபதி....

அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின பெர்னாண்டோ ஆகியோரை சந்தித்துப் பேசியுள்ளார் இதேவேளை வடபகுதி சென்று நிலைமைகளை நேரில் ஆராய இருக்கும் சதீஸ் நம்பியார், இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் தயாசந்தகிரி, விமானப் படைத்தளபதி எயார் மார்சஷல் டொனாட்பெரேரா, பொலிஸ்மாஅதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான- சதீஸ் நம்பியாரின் அறிக்கையானது பல்வேறு காரணங்களின் பொருட்டு முக்கியமானதாக ஒருசாரார் கருதுகின்றனர். எனினும் நம்பியாரின் அறிக்கை தவறான அடிப்படைகளைகொண்டதென விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர் .

நம்பியாரின் இர்கசிய அறிக்கையில் அதியுயர் பாதுகாப்பு வலய பிரதேசத்துக்குள மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு முன்னர் புலிகள் வசமுள்ள நீண்டதூர ஆயுதங்கள களைகளையப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடபகுதிக்கு வரும் சதீஸ் நம்பியார் இவ் வாரம் நிலைமைகளை நேரில் ஆராய்வதன்மூலம் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும். அதியுயர் பாதுகாப்பு வலய நெருக்கடிக்கு சுமுகமான தீர்வொன்று கிடைக்குமென நம்பப்படுகிறது.

இதேவேளை பேர்லினில் நடைபெறவுள்ள ஐந்தாவது சுற்று பேச்சுக்களில் நம்பியாரின் அறிக்கை தொடர்பான விடயங்கள் பிரதிபலிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ந)

### நாட்டின்...

55ஆண்டுகள் கடந்த பின்பும் ஸ்ரீலங்காவை ஒரு பௌத்த நாடாகவும், சிங்கள தேசமாகவும் உலகத்திற்கு காட்டிவரும் பேரினவாதிகள் ஆண்டாண்டு காலமாக தமிழன் அழிவை திட்டமிட்டு மேற் கொண்டு வருகின்றனர்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்குள்ள உரிமைகள் வழங்கப்பட்டு எமது மண்ணில் சுதந்திரமும், கௌரவமும் பாதுகாப்பும் எப்போது கிடைக்கிறதோ அப்போதே நாம் சுதந்திர தினத்தை உரிமையோடு கொண்டாடுவோம்.

இவ்வாறு யாழ். மாணவர் ஒன்றியத் பேரவை, வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், உயர்தர மாணவர் ஒன்றியம் என்பன சுதந்திர தினத்தை நிராகரித்து அறிக்கை வெளியிட்டதுடன் கறுப்புக் கொடிகளையும் பறக்க விட்டு துக்க தினத்தை அனுஷ்டிக்கவும் அறைகூவல் விடுத்துள்ளன. (ம)

# வானொலி ஒலிபரப்பை சிஹல உறுமயவும் நடத்தும்

(கொழும்பு)

சிஹல உறுமயக் கட்சியினரால ஆரம்பிக்கப்படவுள்ள வானொலி நிலையம் அமைக்கும் முயற்சிக்கு 2 கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்குவதற்கு பிரிததானியவில் வாழுகின்ற சிங்கள மககள் முன் வந்திருப்பதாக கட்சியின் பிரசாரச் செயலாளர் தயகம்மன்பல தெரிவித்தார்.

தமது கட்சியால் விரைவில் இலங்கை மட்டுமல்லாது உலக நாடுகளுககும் கேட்கக் கூடியளவில் வானொலி நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடை பெற்று வருவதாகவும அவர் கூறினார். இதற்கு தேவையான ஒரு தொகுதி உபகரணங்களை விரைவில் வழங்க பிரித்தானியாவில் இயங்கும் சிஹல உறுமய கட்சியின் தலைவர் டாக்டர் எம்.டீ.ரணதுங்க இணங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிததார். (ந)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 03.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.